இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டப்பட்டு நூறாண்டு நிறைவு வரவேற்பு நிகழ்ச்சி பக்கம் 3

அஹ்மதிய்யா முஸ்லிம் மருத்துவ சங்கத்தின் சர்வதேச மாநாடு - 2024 பக்கம் 10

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்-5) பக்கம் 14

உலக மக்களுக்காக - முஸ்லிம் -களுக்காக - அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள் பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | November 2024 | Vol. 3 - Issue No. 12



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


## இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டப்பட்டு நூறாண்டு நிறைவு





# திருக்குர்ஆன்

لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ وَاِنْ
تُبْدُوْا مَا فِیْۤ اَنْفُسِكُمْ اَوْ تُخْفُوْهُ
یُحَاسِبْكُمْ بِهِ اللّٰهُ ؕ فَیَغْفِرُ لِمَنْ یَّشَآءُ
وَیُعَذِّبُ مَنْ یَّشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰی كُلِّ شَیْءٍ قَدِیْرٌ

வானங்களிலும் பூமியிலுமுள்ளவை (யாவும்), அல்லாஹ்விற்கே உரியன. உங்கள் உள்ளங்களில் உள்ளதை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லது அதனை மறைத்து வைத்தாலும் அது பற்றி உங்களிடம் அல்லாஹ் கணக்குக் கேட்பான். பின்னர், தான் நாடுபவனை மன்னித்து விடுவான். தான் நாடுபவனுக்குத் தண்டனை கொடுப்பான். மேலும் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவான். (2:285)



# ஹதீஸ்

سَمِعَ أَبَا هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ "لاَ يَقُلْ أَحَدُكُمُ اللَّهُمَّ اغْفِرْ لِي إِنْ شِئْتَ، ارْحَمْنِي إِنْ شِئْتَ، ارْزُقْنِي إِنْ شِئْتَ، وَلْيَعْزِمْ مَسْأَلَتَهُ، إِنَّهُ يَفْعَلُ مَا يَشَاءُ، لاَ مُكْرِهَ لَهُ "

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின் –றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘உங்களில் எவரும், அல்லாஹ்வே! நீ நாடினால் என்னை மன்னிப்பாயாக என்றோ அல்லது நீ நாடினால் என் மீது கருணை புரிவாயாக என்றோ அல்லது நீ நாடினால் எனக்கு ரிஸ்க் வழங்குவாயாக என்றோ வேண்ட வேண்டாம். மாறாக, அவர் தனது துஆவை உறுதியுடன் கேட்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ், தான் நாடுவதை செய்கின்றான். மேலும் அவனை நிர்பந்திப்பவர் எவரும் இல்லை.’’ (புகாரி கிதாபுத் தவ்ஹீது எண். 7477)

## இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டப்பட்டு நூறாண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆற்றிய உரை

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**



கண்ணியமிக்க விருந்தினர் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ். அல்லாஹ்வின் அருளும் கருணையும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு எமது இதயங்களில் ஆழ்ந்த நன்றியுடன், இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டப்பட்டு நூறாண்டு நிறைவு விழாவைக் குறிக்கும் இந்த வரவேற்பு நிகழ்ச்சியை நடத்துகிறோம்.

எங்கள் பள்ளிவாசலுடன் தொடர்புடைய வரவேற்பு நிகழ்ச்சிகள் அல்லது பிற நிகழ்வுகள் முற்றிலும் உலக செயல்பாடுகளைப் போல் இருப்பதில்லை. ஏனெனில் அவை அனைத்தும் உலக நோக்கங்கள் மற்றும் உலக விவகாரங்-களிலிருந்து விடுபட்டிருக்கின்றன.

பள்ளிவாசல் என்பது ஓர் ஆன்மிக சரணாலயம் ஆகும், அங்கு தனி நபர்கள் ஒன்று கூடி ஆன்மிக வளர்ச்சி மற்றும் நல்லொழுக்க மேம்பாட்டிற்காக ஒரு நாளுக்கு ஐந்து நேரங்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குகிறார்கள். இன்று நாம் பணமும் அதிகாரமும் தலைவிரித்தாடும் பொருளாசையின் யுகத்தில் வாழ்கிறோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இருப்பையே மறுத்து, அவனிடமிருந்து மக்கள் விலகிச் செல்கின்றனர். மற்றும் நல்லொழுக்க விழுமியங்களை கை விட்டு விட்டனர். இத்தகைய நேரத்தில், மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற, இறைவனை நம்புகின்ற, அவனை விட்டும் விலகுவதை நினைத்த மாத்திரத்தில் நடுங்குகின்ற ஒருவருக்கு ஒரு பள்ளிவாசலின் வெளிச்சமும் மதிப்பும் இன்னும் பிரகாசமாக பிரகாசிக்கிறது.

எமது பார்வையில் இஸ்லாம், எல்லாம் வல்ல இறைவனின் ஏகத்துவத்தின் மீதான அதன் நம்பிக்கையில் அசைக்க முடியாத வகையில் தனித்து நிற்கிறது. உண்மையில், திருக்குர்ஆன் மனித குலத்தின் படைப்பின் நோக்கமே இறைவனை வணங்குவதே என்று பறைசாற்றுகிறது.

இங்கு, இறைவணக்கம் என்பதன் பொருள் சம்பிரதாயமான வழிபாடு மட்டுமே எனத் தவறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. நிச்சயமாக, பள்ளிவாசல்களில் ஒன்றுகூடி ஐந்து வேளை தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவது முஸ்லிம்கள் மீதான அடிப்படைக் கடமையாகும்.

இருப்பினும், சக மனிதர்கள் மீதான தமது பொறுப்புகளை ஒருவர் புறக்கணித்தால் அவரது பிரார்த்தனைகள் அர்த்தமற்றதாகி அவை நிராகரிக்கப்படும் என்று திருக்குர்ஆன் வெளிப்படையாகவே கூறுகிறது.

இவ்வாறு, ஒவ்வொரு முஸ்லிமின் தொழுகைகளும், ஸஜ்தாக்களும் இறைவனின் படைப்புடன் அவர்கள் நடந்து கொள்ளும் முறையுடன் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, முஸ்லிம்கள் ஸலாத் எனப்படும் இஸ்லாமிய முறைப்படியான தொழுகையில், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன் குனிந்து சிரம் பணிகின்ற அதே வேளையில், அவர்கள் மனித குலத்தின் உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். மக்களின் நம்பிக்கை அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல், அனைத்து மக்களிடமும் இரக்கம், பரிவு மற்றும் அன்பு ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் இதுவே ஓர் அஹ்மதி முஸ்லிமின் மனதில் இருக்கின்ற முழுமையான பொருளிலான இறைவணக்கம் ஆகும். அதாவது இறைவனுக்கும் அவனுடைய படைப்புக்கும் சேவை செய்வது. இதுவே எமது நோக்கமும் எமது குறிக்கோளும் ஆகும்.


எனவே இன்று, ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அஹ்மதி முஸ்லிம்கள் இறைவன் மற்றும் மனித குலம் ஆகிய இரண்டிற்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதன் மூலம்

மட்டுமே இந்த நோக்கங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டதன் நோக்கத்திற்கு உண்மையிலேயே நாம் மதிப்பளிக்க முடியும். மேலும் அப்போதுதான் இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களுக்கு நியாயம் செய்ய முடியும்.

இஸ்லாத்தின் தோற்றுனர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களால் கற்பிக்கப்படும் ஓர் அழகான இஸ்லாமியக் கொள்கை என்னவென்றால், ஓர் உண்மையான நம்பிக்கையாளர் தனக்காக விரும்புவதையே மற்றவர்களுக்-காகவும் விரும்புகிறார். இந்த வழிகாட்டும் கோட்பாட்டின்படி, இறைவனுக்காக அர்ப்பணித்தவர்களின் ஒவ்வோர் அசைவும் செயலும் மற்றவர்களுக்கு நன்மை பயப்பதாக இருப்பதை உறுதி செய்ய முயற்சிக்க வேண்டும். உண்மையில், இஸ்லாத்தின் தோற்றுனர் (ஸல்) அவர்களின் உன்னதமான போதனைகளால் ஈர்க்கப்பட்டு, முஸ்லிம்கள் தங்களுக்கு எந்த நல்ல விஷயங்களை விரும்புகிறார்களோ அல்லது மதிக்கிறார்களோ, அதனை அவர்கள் மற்றவர்களுக்காக விரும்புகிறார்கள். அவ்வாறே அவர்கள் செய்யவும் வேண்டும்.

இவ்வாறே, நமது மார்க்கப் போதனைகளுக்கு மதிப்பளித்து அதனிடமிருந்து பலனைப் பெறும்போது, அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்வதும் நமது கடமையாகும். எவ்வாறாயினும், நமது நம்பிக்கையைப் பிரச்சாரம் செய்வதற்கு முன், அதை நாமே செயல்படுத்துவது கடமையாகும். அப்போதுதான், மனப்பூர்வமான உணர்ச்சியுட-னும், நேர்மையுடனும், அல்லாஹ்வை வணங்குவதன் நிரந்தரமான அருட்கள் மற்றும் எல்லையற்ற நற்கூலியை நோக்கி மற்றவர்களை வழிநடத்த முடியும். அப்போதுதான், திருக்குர்ஆனின் மாசற்ற மற்றும் உன்னதமான போதனைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களை இஸ்லாத்தின்பால் அழைக்க முடியும். சந்தேகத்திற்கு இடமின்றி, அனைத்து தரப்பு மற்றும் பின்னணியில் உள்ள மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் மரியாதை ஆகியவற்றின் பரஸ்பர பிணைப்புகளால் பிணைக்கப்பட்டு அமைதி மற்றும் பாதுகாப்போடு வாழ வேண்டும் என்பது எங்கள் ஆழ்ந்த விருப்பம்.

பிரிவினை, சீர்குலைவு மற்றும் முரண்பாடுகளின் தளைகளில் இருந்து மனிதகுலம் விடுபட, உலகம் முழுவதும் பரப்புவதற்காக நாங்கள் முயற்சிக்கும் செய்தி இதுவாகும். நம்மைப் பின்தொடர்பவர்களுக்குத் துன்பத்தையும் அழிவையும் விட்டுச் செல்லாமல், நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் படைப்பு என்பதை உணர்ந்து, நமது வருங்கால சந்ததியினரை அனைத்து வகையான போர், மோதல் மற்றும் வெறுப்பிலிருந்து பாதுகாக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இவை எல்லாம் வல்ல அல்லாஹ்வால் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், வழிகாட்டியாகவும் இமாம் மஹ்தியாகவும், அல்லாஹ்வின் வாக்குறுதிக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கும் ஏற்ப அனுப்பப்பட்டதாக நாங்கள் நம்புகின்ற எங்கள் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களால் எமது ஜமாஅத்தில் விதைக்கப்பட்ட விழுமியங்கள் ஆகும்.




ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்: 1924-ஆம் ஆண்டு அக்டோபர் 19-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (ஃபஸ்ல்) பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அக்டோபர் 19-ஆம் தேதி வானிலை இனிமையாகவும் வெயிலாகவும் இருக்கும் என்று 18 அக்டோபர் 1924 அன்று செய்தித்தாள்கள் கூறியதாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எல்லாம் வல்ல இறைவன் இந்த முன்னறிவிப்பைத் தவறு என்று நிரூபித்தான். அவனுடைய இருப்பிற்கான தெளிவான அடையாளமாக, அன்று காலையிலிருந்து மழை பெய்தது. இந்த விஷயம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அன்னார், “இதில் கவலைப்பட ஒன்றுமில்லை. உண்மையில் இது மிகவும் நல்லது. இத்தகைய நிலைமைகளின் கீழ் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்பவர்கள் பற்றுறுதியுடன் வருவார்கள். இறைவன் நாடினால், இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக அமையும்” என்று கூறினார்கள். ஒரு சிறிய அரங்கு அமைக்கப்பட்டது. அதனால் மக்கள் அதன் கீழ் உட்கார்ந்து நிகழ்ச்சியை எளிதாகப் பார்க்க முடிந்தது. பல்வேறு நபர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் பல்வேறு மக்கள் குழுக்களும் அடங்குவர். குறுகிய நேரத்தில் அறிவிப்பு செய்ததன் காரணமாக, வருகை மிகவும் குறைவாக இருக்கும் என்று கருதப்பட்டது, ஆனால் இதையும் மீறி, அதிக எண்ணிக்கையிலான விருந்தினர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு அனைத்து வகையிலும் வெற்றிகரமாக அமைந்தது. இந்நிகழ்வின் போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அடிக்கல் நாட்டப்படவிருந்த இடத்தின் அருகில் நின்றார்கள். அப்போது ஹஸ்ரத் ஹாஃபிழ் ரோஷான் அலீ (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் சூரா அல்-லைல், சூரா அல்-அஃலா ஆகிய இரண்டு அத்தியாயங்களை ஓதினார்-கள். அதன் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

(ஜுமுஆ குத்பா 18.10.2024)

இஸ்லாத்தின் உண்மையான ஆவி மற்றும் போதனைகளுக்குப் புத்துயிர் அளிப்பது மற்றும் மனித குலத்தை அமைதி, நீதி, சமத்துவம் மற்றும் சகிப்புத்-தன்மையை நோக்கி வழிநடத்துவது ஆகிய நோக்கத்துடன் அவர்கள் எங்களது ஜமாஅத்தை நிறுவினார்கள்.

இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம் என்று நாங்கள் நம்புகிறோம், திருக்குர்ஆனில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து மனிதகுலத்திற்கும் ஒரு நபியாக அனுப்பப்பட்டார்கள். அதுபோலவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் மற்றும் அவனது படைப்பின் உரிமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்து அனைத்து மக்களையும் அறிவூட்டுவதற்காக வந்ததாக நாங்கள் நம்புகிறோம்




அன்னாரின் வருகையின் போது, சமூகத்தை சூழ்ந்திருந்த ஆன்மிக இருள் மற்றும் தார்மிக சிதைவை அன்னார் கண்டபோது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகுந்த விரக்தியையும் வேதனையையும் உணர்ந்தார்கள்.

மக்கள் தம்மைப் படைத்-தவனை அறிந்து கொள்ள வேண்டும், ஒருவருக்கொருவர் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அன்னாரது ஏக்கம் ஆழ்ந்த வேதனை-யுடன் வெளிப்பட்டது. வல்லமைமிக்க அல்லாஹ், முன்னறிவிப்புகள் மற்றும் அடையாளங்கள் மூலம் தனது அருளை வழங்கினான். வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, அவனுடைய அசைக்க முடியாத ஆதரவையும், அன்னாரது பணியின் இறுதி வெற்றியைக் குறித்த வாக்குறுதியையும் அவன் வழங்கி-னான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துக்கத்தாலும், மனப்பூர்வமான பிரார்த்தனையாலும் விழித்தெழுந்த உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைந்து வருகிறது. இவ்வாறு அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் இன்று அந்த இறை வாக்குறுதி நிறைவேறுவதைக் காண்கிறோம். சில நாடுகளில் தொடர்ச்சியான துன்புறுத்தல் மற்றும் எதிர்ப்பை எதிர்கொண்ட போதிலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இப்போது உலகின் 210-க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் அமைதி குறித்த உலகளாவிய போதனைகளைப் பரப்புவதிலும், இறைவனின் உரிமைகளை நிறைவேற்றுதல் மற்றும் மனிதகுலத்திற்கு சேவை செய்தல் ஆகியவற்றிலும் அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. மேலும், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் இஸ்லாத்தின் போதனைகளை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எடுத்துரைக்கும் முயற்சிகள், மனித குலத்தின் இரட்சிப்பிற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இதயத்தில் ஆழமாக பதிந்த தீவிர விருப்பத்தின் நேரடி விளைவாகும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை, இந்த நாட்டில் உள்ள மக்கள் அன்னாருடைய தூதுச்செய்தியை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நற்செய்தியையும் இது தொடர்பான இறை உதவியையும் குறித்து எல்லாம் வல்ல அல்லாஹ், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கனவின் மூலம் தெரிவித்தான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கனவை விவரித்துக் கூறினார்கள். நான் லண்டன் நகரத்தில் ஒரு மிம்பரில் நின்று இஸ்லாத்தின் உண்மையை ஆங்கிலத்தில் மிகவும் தர்க்க-ரீதியாகவும் சான்றுகளுடனும் எடுத்துரைப்பதைக் கண்டேன். அதன் பிறகு, சிறிய மரங்களில் அமர்ந்-திருந்த பல பறவைகளைப் பிடித்தேன். அவை வெள்ளை நிறத்துடன் காணப்பட்டன. மேலும் அவற்றின் உடல்கள் கவுதாரிகளை ஒத்திருந்தன. அன்னார் மேலும் கூறியதாவது, இதன் விளக்கம் என்ன-வெனில் என்னால் இங்கிலாந்துக்கு செல்ல முடியா விட்டாலும், எனது எழுத்துக்கள் அங்கு வெளியிடப்படும், அதன் உண்மை பல நேர்மையான ஆங்கிலேயர்களை ஈர்க்கும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மிக வாரிசான முதல் கலீஃபாவின் காலத்தில், அல்லாஹ்-வின் அருளுடன், இந்தக் கனவின் வெளிப்பாடு முதலில் நிறைவேறத் தொடங்கியது. இஸ்லாத்தின் போதனைகளைப் பரப்புவதற்காக ஒரு முன்னோடி பிரச்சாரகரை எங்கள் ஜமாஅத் இங்கிலாந்துக்கு அனுப்பியது.

அந்த நேரத்தில், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலகின் இந்த பகுதியில் இஸ்லாம் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே இருந்தது. குறைந்த வசதிகளே இருந்த போதிலும், எமது பிரச்சாரகர் இஸ்லாத்தின் போதனைகளை விடாமுயற்சியுடன் தெரிவித்தார். சில நல்லியல்பு கொண்ட உள்ளூர் மக்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனை-களை மிகவும் ஏற்றுக் கொண்டனர் மற்றும் ஜமாஅத்தில் இணைந்தனர்.



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்

அடிக்கல் நாட்டு விழாவின்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நிறுவிய நினைவுக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள்

“இந்தியாவின் பஞ்சாப், காதியானில் தலைமையகத்தைக் கொண்டுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரான நான், மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ், இந்த பள்ளிவாசலுக்கு இன்று 20 ரபியுல் அவ்வல் ஹிஜ்ரி 1343-ல் இறைவனின் திருப்தியைத் தேடி அடிக்கல் நாட்டுகிறேன். இதனால் அவனது பெயர் இங்கிலாந்தில் மகிமைப்படுத்தப்பட வேண்டும், மேலும் இந்த நாட்டு மக்களும் எங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள அருட்களிலிருந்து பங்கு பெற வேண்டும். நான் இறைவனிடம் பிரார்த்திக்கி-றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் அனைவரின் இந்தப் பணிவான மற்றும் பற்றுமிக்க முயற்சியை அவன் ஏற்றுக் கொள்வானாக!, இந்தப் பள்ளிவாசல் மேலும் மேலும் பொலிவு பெறுவதற்கான வழிவகைகளை அவன் ஏற்படுத்துவானாக! மேலும் தூய்மை, இறையச்சம், நீதி மற்றும் அன்பு ஆகியவற்றின் கருத்துகளைப் பரப்புவதற்கான மையமாக இது என்றென்றைக்கும் விளங்கட்டு-மாக! மேலும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும், நபிமார்களின் முத்திரையுமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் இறைத் தூதராகவும் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிரதிநிதியாகவும் பிரதிபலிப்பாகவும் தோன்றியுள்ள வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மத் (அலை) ஆகியோரின் அருளுக்குரிய ஆன்மிக ஒளிக்கற்றைகளை இந்த நாட்டிலும் சுற்றியுள்ள நாடுகளுக்கும் ஒளிவீசச் செய்கின்ற ஆன்மிக சூரியனாக இந்த இடம் திகழட்டுமாக! ஆமீன்”

(19-10-1924)

அதன் பிறகு, இரண்டாம் கலீ∴பா, ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களின் காலத்தில், இந்த நாட்டில் இஸ்லாத்தின் போதனைகளை மேலும் அறிமுகப்-படுத்துவதற்காக மேலும் பல பிரச்சாரகர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் இருப்பு நேர்மறை எண்ணம் கொண்டிருந்த பல மக்களை ஈர்த்தது. மேலும் அவர்கள் பரப்பிய போதனைகள் இந்த நாட்டை வளப்படுத்துவதற்கான வழிமுறைகளாக இருந்தன. இந்நாட்டில் இஸ்லாத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட இறை-வணக்கஸ்தலம் ஒன்றின் தேவை விரைவில் உணரப்பட்டது. அப்போதுதான் இலண்டனில் பள்ளிவாசல் கட்டும் திட்டத்தில் எங்கள் ஜமாஅத் இறங்கியது. 1920 முதல், அஹ்மதி முஸ்லிம்கள் தனிப்பட்ட தியாகங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் விடாமுயற்சியுடன் நிதி திரட்டினர். இவர்களது கூட்டு முயற்சியின் மூலமாக சவுத் ∴பீல்டில் ஒரு நிலம் வாங்கப்பட்டது. இது இலண்டனில் முதல் பள்ளிவாசலுக்கான இடமாக இருந்தது. பள்ளிவாசலுக்கு ∴பஸ்ல் பள்ளிவாசல் என்று பெயரிடப்பட்டது, அதாவது இறை அருளின்




பள்ளிவாசல் அல்லது அருட்கொடைகளின் பள்ளிவாசல் என்று பெயரிடப்பட்டது. அதன் பிறகு, 1924-ல், வெம்ப்லியில் நடந்த பிரிட்டிஷ் பேரரசு கண்காட்சியின் போது, உலகின் முக்கிய மார்க்கங்களின் மாநாட்டையும் கூட்டி அனைத்து முக்கிய மார்க்கங்களின் பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என்று ஒரு அமைப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டது. இது சம்பந்தமாக, அமைப்பாளர்கள் இங்கிலாந்தில் உள்ள எங்கள் பிரச்சாரகரை அழைத்தனர். அப்போதைய இமாம் அப்துர் ரஹீம் நய்யர் அவர்கள் இஸ்லாம் பற்றி உரை நிகழ்த்துவதாக இருந்தது. நிகழ்வின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, நமது ஜமாஅத்தின் பிரதிநிதிகள், இஸ்லாம் சார்பாக இந்நிகழ்வில் உரையாற்றுவதற்காக, இரண்டாவது கலீ∴பாவே இந்தியாவில் உள்ள காதியானில் இருந்து பயணம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தனர்.

அவ்வாறே, 1924-ல், இரண்டாவது கலீ∴பா, மார்க்கங்களின் மாநாட்டில் பங்கேற்க இங்கிலாந்து சென்றார்கள். அன்னாரது வருகையையொட்டி, ∴பஸ்ல் பள்ளிவாசலின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. எனவே, சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, இரண்டாவது கலீ∴பா அவர்கள்


நீங்கள் அமர்ந்திருக்கும் சவுத் ∴பீல்டில் உள்ள இந்த நிலத்தைத் தமது வருகையால் அலங்கரித்து, ∴பஸ்ல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். இது இங்கிலாந்தில் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு முக்கிய தருணமாக நிரூபிக்கப்பட்டது. அந்த முக்கியமான சந்தர்ப்பத்தில், கூடியிருந்த விருந்தினர்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகளையும் இங்கிலாந்தில் ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கான நோக்கத்தையும் கோடிட்டுக் காட்டும் ஆழமான உரையை இரண்டாம் கலீ∴பா வழங்கினார்கள்.

அந்த உரையின் சுருக்கத்தை முன் வைக்க விரும்புகிறேன். உலகம் முழுவதையும் படைத்த அந்த உன்னதமானவனை நினைவுகூர்ந்து, பணிந்து வணங்கு -வதற்காக மட்டுமே கட்டப்படும் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்கான தனித்துவமான முயற்சிக்காக இன்று நாம் இங்கு கூடியுள்ளோம் என்றார்கள். அதில் நுழைபவர்கள் தங்கள் தேசியம், அவர்கள் வாழும் அரசாங்கம் அல்லது அவர்கள் பேசும் மொழி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒன்றிணைவார்கள். மேலும் அன்னார் தொடர்ந்து கூறினார்கள்: அவர்கள் தமது இறை இருப்பின் திசையில் திரும்பும்போது, அவர்களது அந்தஸ்து, இனம் அல்லது அவர்கள் கிழக்கிலிருந்து வந்தவர்களா அல்லது மேற்கில் இருந்து வந்தவர்களா என்ற அனைத்து வேறுபாடுகளும் பொருளற்றதாகி விடும். ஏனென்றால், ஒருவர் இறைவனிடம் நெருங்கி வரும்போது, ஒற்றுமையின் பிணைப்புகள் வளரும் அதே வேளையில் எல்லா வேறுபாடுகளும் மறைந்து விடும். எனவே, இன்று அடிக்கல் நாட்டப்பட உள்ள கட்டிடம் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நிற்கும். நமது தோற்றமும் திரும்பும் இடமும் உண்மையில் ஒன்றே என்பதை இது நமக்கு நினைவூட்டும்.

எனவே, நமக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகள் மோதலையோ, முரண்பாட்டையோ ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது. இரண்டாவது கலீ∴பா கூறிய நேரத்தில் இருந்ததைப் போலவே இன்றும் பொருந்தக்கூடிய தலைகீழ் வேறுபாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் உலகில் எப்போதும் உள்ளன, எப்போதும் இருக்கவே செய்யும். மனிதர்களுக்கு முன்னேற்றம் மற்றும் புதுமைகளை உருவாக்கும் திறன் இருக்கும் வரை, நிச்சயமாக வேறுபாடுகள் மற்றும் சர்ச்சைகள் இருந்து கொண்டே இருக்கும், ஏனெனில் உலகின் முன்னேற்றம் இத்தகைய கருத்து வேறுபாடுகள் மற்றும் வெவ்வேறான ஆலோசனைகளினாலேயே விளைகிறது.

உண்மையில், நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் வேறுபாடுகள் ஓர் அருள், சாபம் அல்ல என்று கூறினார்கள். மாறாக, சகிப்பின்மை தீங்கு விளைவிக்கும், ஏனெனில் இது முன்னேற்றத்தைத் தடுக்கிறது மற்றும் இணக்கத்தைக் கட்டாயப்படுத்துகிறது.

இரண்டாவது கலீ∴பா தொடர்ந்து கூறினார்கள்: உண்மையில், ஒற்றுமையை நிலைநிறுத்துகிறோம் என்ற பெயரில் சிலர் தங்களின் குறிக்கோளுக்கு முற்றிலும் முரணான நிர்ப்பந்தமான முறைகளைக் கடைப்பிடிப்பதைப் போன்று ஒற்றுமையை சேதப்படுத்தும் செயல் வேறொன்று -மில்லை. முரண்பாடான விஷயம் என்னவெனில், ஒற்றுமை




மற்றும் சமூக இணக்கத்திற்கான நாட்டம் அதன் எதிரிகளை விட அதன் தவறான கூட்டாளிகளால் மிகவும் பெரிய காயத்தை சந்தித்துள்ளது. எனவே, ஒரு நபர் எப்போதும் சகிப்புத்தன்மையையும் மரியாதையையும் வெளிப்படுத்த வேண்டும். அன்னார் கூறினார்கள், இன்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன், பன்முகத்தன்மை என்பது உண்மையில் சமூகத்தை வளப்படுத்துவதற்கும் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு ஏற்படுவதற்கும் ஒரு வழிமுறையாகும்.

அன்னாரது உரையின் போது, இரண்டாவது கலீ∴பா அவர்கள் மக்காவில் உள்ள புனித பள்ளிவாசல், அனைத்து நாடுகளைச் சேர்ந்த மக்களும் ஒன்றுகூடி எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குவதற்கும், அமைதி, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர அன்பை வளர்ப்பதற்கும் ஒருங்கிணைக்கும் சக்தியாக கட்டப்பட்டுள்ளது என்று விளக்கமளித்தார்கள். அதே போன்று, அதே உன்னத நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ∴பஸ்ல் பள்ளிவாசலும் கட்டப்பட இருந்தது. அன்னார் கூறுகையில், அடிக்கல் நாட்டுவதற்கு முன், இந்தப் பள்ளிவாசல் முழுக்க முழுக்க, பிரத்தியேகமாக எல்லாம் வல்ல இறைவனை வணங்குவதற்காக கட்டப்படுகிறது என்பதை உறுதிபடுத்த விரும்புகிறேன். அதனால் இறைவனின் அன்பு உலகில் நிலைநிறுத்தப்பட வேண்டும் மற்றும் மக்கள் மார்க்கத்தின் மீது ஈர்க்கப்படுவார்கள். அது இல்லாமல் உண்மையான அமைதி மற்றும் முன்னேற்றம் சாத்தியமில்லை. நிர்வாகத்தின்




வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, இந்தப் பள்ளிவாசலைக் கட்டுபவர்களின் வழிபாட்டு உரிமையை மதித்து, எல்லாம் வல்ல இறைவனை வழிபட இங்கு வர விரும்பும் எவரையும் நாங்கள் தடுக்க மாட்டோம் என்றார்கள். இந்தப் பள்ளிவாசல் பரஸ்பர சகிப்புத்தன்மை மற்றும் மரியாதை உணர்வை வளர்க்கும் என்று நான் நம்புகிறேன். இது சமூகத்தில் இருந்து அனைத்து வகையான மோதல்கள் மற்றும் முரண்பாடுகளை அகற்றி உலகில் அமைதி மற்றும் பாதுகாப்பை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கும். ஒன்றாக இணக்கமாக அன்பு மற்றும் பாசத்தின் ஆவியுடன் போரையும், மோதலையும் கைவிட்டு மக்கள் வாழும் நாள் விரைவில் வரும் என்றார்கள்.

மனித குலம் அனைத்தையும் படைத்தவன் ஒரே இறைவன் என்பதால், தன் சகோதர, சகோதரிகள் மீது வைத்திருக்கும் அன்பையும், பாசத்தையும் விட அதிக அன்புடனும் பாசத்துடனும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதை மனித இனம் உணரும் நாள் விரைவில் வரும். ஒருவர் மற்றவரின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தடுக்காமல், அவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்கு மக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

அந்தச் சந்தர்ப்பத்தில், இரண்டாவது கலீஃபாவின் சொற்பொழிவு ஃபஸ்ல் பள்ளிவாசலின் ஒரு மகத்துவமிக்க காட்சியினை முன் வைத்தது, அதாவது அது இறைவனை வணங்குவதற்கும், மனிதகுலத்திற்கு சேவை செய்வதற்கும், இஸ்லாத்தின் அமைதி மற்றும் ஒற்றுமையின் போதனைகளைப் பரப்புவதற்கும் ஒரு வழியாகத் திகழும்.

இன்று, ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, அனைத்து அஹ்மதி முஸ்லிம்களும் அதே நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும், நம்முடைய பள்ளிவாசல்கள் என்றென்றும் அமைதி, ஒற்றுமை மற்றும் சர்வவல்லமை உள்ள அல்லாஹ்வுக்கு அர்ப்பணிப்பு ஆகியவற்றின் கலங்கரை விளக்கங்களாக இருப்பதை உறுதி செய்வதில் உறுதியாக உள்ளனர். சந்தேகத்திற்கு இடமின்றி, நாம் பெரும் கொந்தளிப்பின் காலத்தில் வாழ்கிறோம், அமைதியின்மை மற்றும் உலகளாவிய மோதல்களின் புயலுக்கு மத்தியில் நம்மைக் காண்கிறோம். உலகெங்கிலும், போர்கள் பொங்கி எழுகின்றன, கற்பனை செய்ய முடியாத எண்ணிக்கையில் உயிர்கள் சோகமாக இழக்கப்படுகின்றன, மேலும் அல்லாஹ்வின் உரிமைகள் மற்றும் மனிதகுலத்தின் உரிமைகள் அப்பட்டமாக புறக்கணிக்கப்படுவதை நாம் காண்கிறோம். மனிதாபிமான விழுமியங்களை நிலைநிறுத்து -வதற்குப் பதிலாக, இன்று இலட்சக்கணக்கான உயிர்களின் அழிவை ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமல்லாமல், மனிதகுலத்தின் எதிர்காலத்தின் மீது மிக நீண்ட மற்றும் இருண்ட நிழலைப் போடும் சுய நோக்கங்களின் இரக்கமற்ற நாட்டத்தை நாம் காண்கிறோம். சந்தேகத்திற்கு இடமின்றி, இன்று நாம் செய்யும் செயல்களின் விளைவுகள் காலப்போக்கில் எதிரொலிக்கும் மற்றும் அவையே நம் குழந்தைகள் நம்மிடமிருந்து பெறும் உலகத்தை வடிவமைக்கும். எனவே, ஏக இறைவனின் படைப்பாகிய நாம், எரிந்து கொண்டிருக்கும் போர் மற்றும் மோதல்களின் தீப்பிழம்புகளை அணைக்க வேண்டும். மேலும் இதற்காக ஒரு மார்க்கவாதி என்ற முறையில், வல்லமையுள்ள இறைவனுக்கு செலுத்த வேண்டிய வழிபாட்டு உரிமைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்பது எனது நம்பிக்கையாகும். அனைத்து மக்களும் தங்கள் நம்பிக்கைகளைப் பொருட்படுத்தாமல், தங்கள் படைப்பாளனின் உரிமைகளை நிறைவேற்றுவதில் ஒன்றிணைந்து, உலகில் நிலையான அமைதிக்கான விதைகளை விதைப்பதில் தங்களுக்குரிய பங்கை வகிக்க வேண்டும் என்று நாங்கள் தீவிரமாக விரும்புகிறோம். அவ்வாறு செய்வதன் மூலம், நாம் இறை கோபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம், மேலும் இம்மையிலும் மறுமையிலும் அமைதி மற்றும் செழிப்பான



எதிர்காலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். முஸ்லிம்களாகிய நாம், இவ்வுலக வாழ்க்கை என்பது மறுமையில் நமக்கு காத்திருக்கும் நித்திய வாழ்க்கைக்கான வழியில் ஒரு விரைவான பாதை என்று நாங்கள் நம்புகிறோம். இந்த உலகில் நமது செயல்கள் எல்லையில்லா அந்த வாழ்வில் எதிரொலிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அங்கு நம் செயல்கள் இறை நீதியின் தராசுகளில் எடை போடப்படும், மேலும் நாம் எடுக்கும் முடிவுகளுக்கு பொறுப்பாளி ஆக்கப்படுவோம். எனவே, இறைவன் காப்பானாக. மனிதகுலம் மீண்டும் அணு ஆயுதப் போரின் கொடூரத்தைக் கண்டால், அதன் கொடூரமான விளைவுகள் வரும் தலைமுறைகளால் உணரப்படும். அப்பாவி குழந்தைகள் உடல் அல்லது மன குறைபாடுகளுடன் பிறக்கும்.

நமது சுயநலத்தின் காரணமாகவும் அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டத் தவறியதன் காரணமாகவும் தலைமுறைகள் அதிர்ச்சி, ஆத்திரம் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றிற்கு இரையாகி விடும். எனவே, எனது உரையின் முடிவில் எல்லாம் வல்ல இறைவனின் மீதான அன்பும் மற்றும் அவனது படைப்புகள் மீதான அன்பும் அனைத்து மனிதகுலத்தின் இதயங்களிலும் நுழைய வேண்டும் என்பதே எனது இதயப்பூர்வமான பிரார்த்தனையாகும். நிச்சயமாக, இந்த நோக்கத்தை அடைவதற்காகவே ஃபஸ்ல் பள்ளிவாசல் கட்டப்பட்டது, மேலும் இந்த செய்தியை மீண்டும் வலியுறுத்தவும், எல்லாம் வல்ல இறைவனின் மகத்தான அருட்கொடையை அங்கீகரிக்கவும் இந்த நிகழ்வை நாங்கள் இன்று நடத்தியுள்ளோம். அல்லாஹ் நம் அனைவரின் மார்க்கமும் நம்பிக்கையும் எதுவாக இருப்பினும், அனைத்து மார்க்கங்கள், இனங்கள் மற்றும் பின்புலங்களைச் சேர்ந்த மக்களும் ஒற்றுமையாகவும், ஒருவரையொருவர் அன்புடனும், பாசத்துடனும் வாழும் ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் நமது பங்கை ஆற்றிடச் செய்வானாக. இந்த உன்னத நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவன் நமக்கு வலிமை, ஞானம் மற்றும் கருணையை வழங்குவானாக. இந்தச் சொற்களுடன், இந்த வரலாற்று சந்தர்ப்பத்தில் எங்களுடன் இணைந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவர் மீதும் அருள் பாலிக்கட்டும். மிக்க நன்றி!

- ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜனவரி 6. 1920-ல் இலண்டன் பள்ளிவாசல் கட்டுவதற்காக நிதி திரட்டுவதற்கான அறிவிப்பைச் செய்தார்கள்.
- 95,000 ரூபாய் இந்த வகைக்காக திரட்டப்பட்டது. அதில் 6000 ரூபாய் அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலேயே பெறப்பட்டது. பெரும்பான்மை தொகை ரூபாய் 83000 அஹ்மதி சகோதரிகளால் வழங்கப்பட்டது.



- பள்ளிவாலுக்காக ஒரு ஏக்கர் நிலம் சவுத்ரி ஃபத்தே முஹம்மது சியால் சாஹிப் அவர்களால் 2223 பவுண்டிற்கு ஆகஸ்ட் 1920-ல் வாங்கப்பட்டது.
- அடிக்கல் நாட்டு விழாவில் 200 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அஸ்திவாரத்திற்கான குழி இரண்டு பெண்கள் உட்பட 15-ற்கும் மேற்பட்ட தன்னார்வ ஊழியர்களால் மவ்லானா அப்துர் ரஹீம் தர்த் சாஹிப் மேற்பார்வையில் தோண்டப்பட்டிருந்தது.
- கட்டுமானப்பணி செப்டம்பர் 28, 1925-ல் ஆரம்பிக்கப்பட்டது. பத்து மாதங்களில் 4000 பவுண்ட் செலவில் முடிக்கப்பட்டது.


அடிக்கல் நாட்டிய பின் நடைபெற்ற தொழுகை

- ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் ஃபஸ்ல் பள்ளிவாசல் எனப் பெயரிடப்பட்டது.
- அக்டோபர் 3, 1926 மாலை 3.00 மணி அளவில் கான் அப்துல் பஹதூர் சாஹிப் அவர்களால் 600 விருந்தினர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.
- இலண்டன் பள்ளிவாசலின் முதலாவது இமாம் மவ்லானா அப்துர் ரஹீம் தர்த் ஆவார்கள்.
- முதலில் தொழப்பட்ட தொழுகை அஸ்ர் தொழுகையாகும்

# அஹ்மதிய்யா முஸ்லிம் மருத்துவ சங்கத்தின் சர்வதேச மாநாடு - 2024

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆற்றிய உரை

**தமிழாக்கம்:**
**N. முபாரக் அஹ்மது மற்றும் I. முஹம்மது அலி ஜின்னா தல்ஹா**




அஹ்மதி முஸ்லிம் மருத்துவ சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான புதிய மற்றும் சிறந்த வழிகளை ஆராயவும், ஒத்துழைக்கவும் உலகெங்கிலும் உள்ள அஹ்மதி மருத்துவர்கள் இந்த மாநாட்டில் இணைந்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களின் சொந்த அனுபவங்களைப் பகிர்வதோடு மட்டுமல்லாமல், உலகளவில் உங்கள் செயல்பாடுகள் மற்றும் சேவையின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கான யோசனைகளையும் திட்டங்களையும் நீங்கள் உருவாக்கு -வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நிச்சயமாக, நீங்கள் ஜமாஅத்தின் மருத்துவ திட்டங்களுக்காகவும் மனித குலத்திற்குத் தொண்டாற்று -வதற்காகவும் உறுதியான திட்டத்தை வகுத்துள்ளீர்கள் அல்லது இனி வகுப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். மேலும் அதற்காக நான் பிரார்த்திக்கின்றேன்.

மேலும், நோயுடன் போராடும் மற்றும் உடல்நல சவால்களை எதிர்கொள்ளும் அஹ்மதிகளுக்கு நீங்கள் எவ்வாறு உதவி செய்தீர்கள் என்பதை நீங்கள் சிந்தித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அல்லாஹ்வின் அருளால் சில நாடுகளில் உள்ள நமது மருத்துவ சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுகின்றன. எனக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி, ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் மருத்துவ சங்கம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும், ஜமாஅத் மருத்துவமனைகளில் அத்தியாவசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குவதிலும் மற்றவர்களை விட முன்னணியில் உள்ளது.

எப்பொழுதெல்லாம் நான் அவர்களிடம் ஏதாவது ஒரு நோயாளிக்காக அவர்களின் நிபுணத்துவம் மற்றும் ஆலோசனைக்காக அவர்களிடம் குறிப்பிடும் போதெல்லாம், அவர்கள் தயக்கமின்றி தனிநபரின் சிகிச்சைக்கான செலவை ஈடுசெய்வதற்காக அல்லது நோயாளிகள் சார்பாக தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு வழியும் ஆராயப்படுவதை உறுதி செய்வதாக உறுதி அளித்தனர். அவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆதரவை வழங்க எல்லா வகையான உதவிகளையும் செய்தனர். இதே போல், அவர்கள் ஆப்பிரிக்கா மற்றும் ரப்வாவில் உள்ள நமது மருத்துவமனைகளுக்குக் கணிசமான அளவு மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

மேலும், பல ஆண்டுகளாக மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் வசிக்கும் அஹ்மதிகளுக்கு அவர்களின் புகலிட வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளனர். கஷ்டங்கள் மற்றும் இடப்பெயர்ச்சிகளை எதிர்கொள்பவர்களுக்கு சேவை செய்வதில் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, முஸ்லிம்களாகிய நமது நம்பிக்கையில் உள்ளடங்கிய சேவை உணர்வை வெளிப்படுத்துகிறது.

ஆஸ்திரேலியாவில் மருத்துவ சங்கம் பெரியதாக இல்லா விட்டாலும், மருத்துவர்கள் குறிப்பாக வசதி படைத்தவர்கள் அல்ல. அவர்களால் இவை அனைத்தையும் சாதிக்க முடிந்தது எப்படியென்றால் அவர்கள் மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பத்தின் விளைவாகவும், துல்லியமான திட்டமிடல், முழுமையான ஒத்துழைப்பு மற்றும் அவர்களின் வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதன் விளைவாகவும் அத்தகைய நம்பகமான சேவையை வழங்கினர். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக, அவர்களின் முயற்சிகளை ஆசீர்வதிப்பானாக. ஆமீன்.

எனவே, எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உண்மையான சேவை நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பதில் இல்லை. ஆனால் மற்றவர்களுக்காக நாம் எவ்வளவு கொடுக்கவும், தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம் என்பதைப் பற்றியதாகும்.

அல்ஹம்துலில்லாஹ்! அமெரிக்காவில் உள்ள நமது அஹ்மதி மருத்துவர்களும் ஜமாஅத் மருத்துவ உதவி முயற்சிகளுக்கு சேவை செய்வதில் நீண்ட கால அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர். தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ரப்வாவை நிர்மாணிப்பதில் அவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இந்த வழியில், மருத்துவமனைகள் திறக்கப்பட்டதில் இருந்து எண்ணற்ற நபர்களுக்கு வழங்கிய இருதய சிகிச்சைக்கு அவர்கள் நேரடியாகப் பங்குபெற்றனர்.

கூடுதலாக, அவர்கள் அத்தியாவசிய மருத்துவ இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதன் மூலம் இந்நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றனர். இது மருத்துவமனையின் வளர்ச்சியையும் செயல்திறனையும் தொடர்ந்து உறுதிப்படுத்த உதவுகின்றது.

மேலும், அல்லாஹ்வின் அருளால் அமெரிக்காவைச் சேர்ந்த 2 அல்லது 3 அஹ்மதி மருத்துவர்கள் பல ஆண்டு -களாக அசாதாரண அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். தொடர்ந்து ரப்வாவுக்குப் பயணம் செய்வதன் மூலம். தாஹிர் ஹார்ட் இண்ஸ்டியூட் நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்து சிறப்பான சிகிச்சை அளித்து வருகின்றனர். சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள் ஒரு வாழ்வை அர்ப்பணித்தவரிடம் எதிர்பார்க்கும் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்துடன் ஜமாஅத்திற்கு சேவை செய்கிறார்கள். அவர்களின் சேவைக்காக அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான வெகுமதியை வழங்குவானாக.




அடுத்ததாக, நீங்கள் தற்போது மேற்கொண்டு வரும் பணிகளுடன் மேலும், அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் மருத்துவ சங்கம் ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையில், ஃபஸ்லே உமர் மருத்துவமனை மருத்துவச் சிறப்பின் உண்மையான மையமாக மாற வேண்டும் என்பதே இலட்சியமும் நோக்கமுமாக இருக்க வேண்டும். இதை அடைய, புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டும், ஏற்கனவே உள்ள கட்டடங்களைப் புதுப்பிக்க வேண்டும். மேலும், நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வாங்க வேண்டும். மேலும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணைப்பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

எனவே, இதன் பக்கம் கவனமூட்டுகின்றேன். அதாவது உங்கள் திறமைகள், நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு ஃபஸ்லே உமர் மருத்துவமனையை உண்மையான சிறப்பின் மையமாக உயர்த்த முடியும் என்பதற்கான வழிகளையும் ஆராய வேண்டும். இந்த இலக்கை அடைய முடிந்தால், நீங்கள் இன்று எண்ணற்ற நபர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வரும் தலைமுறைகளுக்கும் ஒரு நிலையான பாரம்பரியத்தை விட்டுச் செல்வீர்கள் - இன்ஷாஅல்லாஹ்.

சமீப ஆண்டுகளில் பாகிஸ்தானில் இருந்து பல அஹ்மதியர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர் மற்றும் பின்தங்கியவர்களில் பெரும்பாலானோர் வசதி படைத்தவர்கள் அல்ல. உண்மையில், பலர் உண்மையான கஷ்டங்களில் வாழ்கின்றனர். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மருத்துவச் செலவுகளைக் கருத்தில் கொண்டு, அத்தகையவர்களால் அடிப்படை மருத்துவ வசதிகளைக் கூட வாங்க முடியாத நிலை உள்ளது. ஒரு ஜமாஅத் என்ற முறையில், கித்மத்தே கல்க் நாம் நமது மார்க்கத்தின் கடமையாகக் கருதுகிறறோம். தேவைப்படுபவர்களின் துன்பத்தைப் போக்க முயற்சிப்பது நமது கடமையாகும். இதனால் தான், சத்ர் அஞ்சுமனின் பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க பகுதி அத்தகைய மக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவுவதற்காக ஒதுக்கப்படுகிறது. இதுபோன்ற உதவிகளை நாம் தொடர்ந்து செய்து வருவோம் - இன்ஷா அல்லாஹ்.

அதே நேரத்தில், ஜமாஅத்தின் மருத்துவ சங்கம் ரப்வாவில் உள்ள மருத்துவமனை நிர்வாகம் மற்றும் நஸாரத்தே ஸெஹத் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் குறுகிய கால மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்கான விரிவான திட்டங்களை உருவாக்க வேண்டும். உள் கட்டமைப்பு மற்றும் மேம்பாடு போன்ற முக்கிய பகுதிகளை இந்தத் திட்டங்கள் குறிப்பிட வேண்டும். மாதிரி மருத்துவ உபகரணங்களைப் பெறுதல், திறமையான பணியாளர்களைப் பணி அமர்துதல், பயிற்சி செய்தல் மற்றும் சமூகத்தின் பரந்த அளவிலான சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, கூடுதல் சிறப்புத் துறையை நிறுவுதல் போன்றவை இருக்க வேண்டும்.

ஃபஸ்லே உமர் மருத்துவமனையை நவீன வசதியுடன் மேம்படுத்த வேண்டும் என்று பல அஹ்மதி மருத்துவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றனர். இருப்பினும், இதை பரிந்துரைப்பது மட்டும் போதாது. ஒரு மருத்துவர் மற்றும் மருத்துவ சங்கம் என்ற முறையில் இந்த உத்வேகத்தை யதார்த்தமாக மாற்றும் தர வரிசையில் நீங்கள் இருக்க வேண்டும். எனவே, இந்தத் திட்டத்தில் நீங்கள் விடா முயற்சியுடன் செயல்பட வேண்டும். உங்கள் கருத்துகளை எனக்கு அனுப்புங்கள்.

அஹ்மதி மருத்துவர்களின் ஒரு தனித்துவமான அம்சம். அமெரிக்காவில் மருத்துவர்களாகப் பணியாற்றுவதுடன் கூடுதலாக, மனித அறிவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பின் எல்லைகளில் முன்னேற விரும்பும் மருத்துவ ஆராய்ச்சி -களிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். இதே போல் ஜெர்மனியில் சில அஹ்மதி விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் இருதயவியல் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கு -கின்றனர்.

உதாரணமாக, மிகக் குறைந்த விலையில் ஸ்டண்ட்களை உருவாக்கித் தயாரித்து வருகிறார்கள். ஆரம்ப முடிவுகள் மிகவும் நம்பிக்கைக்குரியவை, மேலும் அவை நோயாளிகளுக்கு நன்மை பயக்கும் என்று நிரூபிக்கப்

-பட்டுள்ளது. ஜெர்மன் அஹ்மதி மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் உள்ளூர் மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் மிகுந்த அர்ப்பணிப்புடன் ரப்வா மற்றும் ஆப்பிரிக்காவிற்குப் பயணம் செய்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான நற்கூலி வழங்குவானாக. மேலும் அவர்களின் அறிவையும் புரிதலையும் மேம்படுத்துவானாக.

ஒருவேளை சில அஹ்மதி மருத்துவர்கள் அல்லது மருத்துவ நிபுணர்களும் இதே போன்ற ஆராய்ச்சியில் ஈடுபடலாம். ஆனால் மர்க்கஸுக்கு அவர்கள் தெரியப் -படுத்துவதில்லை. எவ்வாறாயினும், மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடும் அஹ்மதியர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளில் வசிப்பவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட மருத்துவ சவால்களை ஆராய தங்கள் ஆய்வுத் துறைகளை விரிவுபடுத்த வேண்டும். புதுமையான தீர்வுகளை ஆராய்ந்து செலவு குறைந்த சிகிச்சைகளை உருவாக்குங்கள். மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையான சுகாதார அமைப்பின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முயற்சி செய்யுங்கள்.



மேலும், நான் பலமுறை கூறியது போல், உலக அரசியல் நிலைமை மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றது, மேலும் நாம் ஒரு கடுமையான நிச்சயமற்ற காலத்தில் வாழ்கிறோம். மோதல்கள் மற்றும் போர்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. இறைவன் காப்பானாக! உலகப் போர் வர வாய்ப்பிருக்கின்றது. இதன் விளைவாக மனிதகுலம் கற்பனை செய்ய முடியாத அளவில் மோசமான விளைவைச் சந்திக்கும்..

அத்தகைய போரைத் தடுக்க நாம் தொடர்ந்து பிரார்த்தனை செய்யும் அதே வேளையில், எல்லா நிகழ்வுகளுக்கும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். எனவே, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள எங்கள் மருத்துவ சங்கங்கள் ஒரு விரிவான செயல் திட்டத்தை முன்கூட்டியே உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உலகளாவிய நெருக்கடியின் போது நமது மருத்துவர்களும் மருத்துவக் குழுவும் மனித குலத்திற்கு எவ்வாறு சேவை செய்ய தங்கள் திறமைகளையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அடுத்ததாக UK மருத்துவ சங்கத்தின் முயற்சிகள், சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் தங்களது செலவில் Ivory Cost-ல் ஒரு மருத்துவமனை கட்ட உறுதியளித்தனர். எவ்வாறாயினும் இறுதியில் அத்தகைய மருத்துவமனையை உருவாக்கி நடத்த முடியுமா என்ற தயக்கத்தின் காரணமாக அவர்கள் அந்த மருத்துவமனையைக் கைவிட்டனர். அவர்கள் ஓரளவு பணஉதவி செய்திருந்தாலும், அதன் பிறகு Humanity First மருத்துவமனைத் திட்டத்தின் உரிமையைப் பெற்றது.

எவ்வாறிருப்பினும் ஹியூமனிட்டி ஃபர்ஸ்ட் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. அதாவது யு.கே. மெடிக்கல் இன்ஸ்டியூட் முழுமையாக தனது வாக்குறுதியை நிறைவேற்ற வில்லை. கடந்த காலத்தில் என்ன நடந்த போதிலும் நான் நம்பிக்கையோடு துஆ செய்கின்றேன். ஐவரிகோஸ்டில் உள்ள ஹாஸ்பிடல் சீக்கிரமாக முழுமை பெறுவதற்கும் மேலும் உள்ளூர் மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை புரிவதற்கும் இன்ஷா அல்லாஹ் இதன் வெற்றி, நிலைத்தன்மையிலும் பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு சிகிச்சை மற்றும் செயல்முறைகளை வழங்குவதிலும் உள்ளது.

பெரும்பாலான மக்கள் சிகிச்சைக்கான செலவை செலுத்த முடியாத பொருளாதாரத்தில் பின்தங்கிய நாட்டில் கட்டப்பட்டுள்ளதால் சமீப காலத்தில் மருத்துவமனை தன்னிறைவை அடையும் என்று தோன்றவில்லை. அதன்படி ஹியூமனிட்டி ஃபர்ஸ்ட் அதன் நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான வழிகளை ஆராய்ந்து வருகிறது. யு.கே. ஜமாஅத் மருத்துவ சங்கம் இந்தத் திட்டத்திலிருந்து முழுமையாக விலகி விடவில்லை என்று நம்புகின்றேன். மாறாக மருத்துவமனையின் கட்டுமானத்தில் இனி ஈடுபடா விட்டாலும் யு.கே. மருத்துவ சங்கம் கட்டுமானத்திற்குப் பிந்தைய மதிப்புமிக்க பங்களிப்பை வழங்க முடியும். மேலும் வழங்கவும் வேண்டும்.

நடைமுறை மற்றும் தாக்கத்திற்குரிய வழி என்னவெனில் நமது அஹ்மதி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களை ஐவரிகோஸ்டிற்கு வழக்கமாக பயணம் செய்ய ஏற்பாடு செய்து அவர்கள் தங்களின் சேவைகளை வக்ஃபே ஆர்சி மருத்துவர்களை வழங்குவது ஆகும். இது பொருளாதார சுமையைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் மருத்துவமனை மருத்துவ நிபுணர்களின் ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்கி சமுதாயத்திற்கு சிறப்பான சேவை செய்யவும் உதவும் - இன்ஷாஅல்லாஹ்.

இந்த அனுபவத்திற்குப் பிறகு ஆப்பிரிக்கா அல்லது பிற வளரும் நாடுகளில் மருத்துவமனைகளை உருவாக்குவது நம்பத்தகாதது அல்ல அல்லது உங்கள் திறன்களுக்கு அப்பாற்பட்டது அல்ல என்று நீங்கள் நினைக்கக் கூடாது. சமீப காலங்களில் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் யு.கே, BurkinaFaso மஸ்ரூர் கண் மருத்துவமனையைக் கட்டியுள்ளது மற்றும் ஒரு பொது மருத்துவமனையையும் கட்டியுள்ளது. அல்லாஹ்வின் அருளால் யு.கே -வைச் சேர்ந்த கண் நிபுணர்கள் உட்பட அஹ்மதி மருத்துவர்கள் தங்கள் சேவைகளை வழங்கவும் உள்ளூர் மருத்துவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகவும்

அங்கு தொடர்ந்து பயணம் செய்து வருகின்றனர். யு.கே.-விலிருந்து பயணம் செய்பவர்கள் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் மருத்துவர்கள் மட்டுமல்ல; மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் மருத்துவர்களும் அடங்குவர் .

எனது பார்வையில் அவர்கள் யு.கே. மருத்துவ சங்கத்தை விட மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் முயற்சியால் தங்கள் சேவைகளைச் செய்ய ஊக்கம் பெற்றுள்ளனர். நிச்சயமாக அஹ்மதி டாக்டர்கள் பிற நாடுகளுக்குப் பயணம் செய்ய ஒரு நிலையான முயற்சி தேவைப்படுகிறது. மேலும் யு.கே மருத்துவ சங்கம் இந்த முயற்சியில் நிலைத் தன்மையுடன் செயல்படுவதில் குறைபாடுடன் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

இந்த வார இறுதியில் யு.கே மருத்துவ சங்கம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. மேலும் இந்த மாநாடு நிச்சயமாக நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனது பார்வையில் இது நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள -தாகவே தெரிகிறது. உலகின் ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் வந்துள்ள பிரதிநிதிகள் நல்ல முறையில் கவனிக்கப்படு -கின்றார்கள். எனினும் நாம் ஏற்பாடு செய்யும் மாநாடுகளில் நமது வெற்றி இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மாறாக, உலகில் நாம் ஏற்படுத்தும் தாக்கத்திலேயே நமது வெற்றி உள்ளது.

உங்களின் குறிக்கோள்கள் இந்தக் கரைகளைக் கடந்து உலகின் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குள் உள்ளன. எனவே யு.கே மருத்துவ சங்கம் தனது மனித நேய சேவையை ஆண்டு முழுவதும் நிறைவேற்றுவதற்காக தீவிரமாகவும் கடுமையாகவும் வேலை செய்ய வேண்டும். மேலும் மற்ற ஜமாஅத்துகளும் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு முன்மாதிரியாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அஹ்மதி மருத்துவர்களை நமது மருத்துவமனைகளில் சேவையாற்றுவதற்காக அடிக்கடி வெளிநாடு பயணம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் மனித நேயத்திற்கு உங்கள் சேவைகளை விரிவுபடுத்த புதிய வழிகளைத் தொடர்ந்து கண்டுபிடிக்க வேண்டும் பிற ஜமாஅத்தின் மருத்துவ சங்கங்களை ஊக்கமளிக்கவும் அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் செயல்பட வேண்டும். நான் யு.கே.-வில் உள்ள அஹ்மதி மருத்துவர்கள் தங்களின் வேலைகளை சரிவர செய்யவில்லை என்று சொல்லவில்லை. உண்மையில் இங்குள்ள பல மருத்துவர்கள் மனிதநேயத்தோடும், இரக்கத்தோடும் தங்கள் சேவைகளைச் செய்வதை நான் அறிவேன். அவர்களின் முயற்சிகளில் அல்லாஹ் பன்மடங்கு நன்மைகளை வழங்குவானாக. இருப்பினும் குழு நடவடிக்கை தாக்கத்தை விரிவுபடுத்தும் வழிமுறை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதே போல் நான் தனிப்பட்ட முறையில் குறிப்பிடாத அந்த நாடுகளில் உள்ள அஹ்மதிய்யா மருத்துவ சங்கம் நமது ஜமாஅத்திலும் வெளியிலும் தேவைப்படுபவர்களுக்கு சேவை செய்வதற்கான அவர்களின் முயற்சிகளைத் தொடர்ந்து அதிகரிக்கும் என்று நான் நம்புகின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அனைத்து அஹ்மதி மருத்துவ சங்கங்களுக்கும் மனிதநேய சேவைக்கான உயரிய



திட்டங்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உதவுவானாக.

இறுதியில் ஒவ்வோர் அஹ்மதி மருத்துவர் மற்றும் மருத்துவ நிபுணருக்கும் நான் இதை நினைவூட்ட விரும்புகின்றேன். ஓர் அஹ்மதியாக அல்லாஹ்வின் உரிமை -களை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல் மனித குலத்திற்கு சேவை செய்வதிலும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு சேவை செய்வதிலும் நீங்கள் தனித்துவமான நிலையில் இருக்கிறீர்கள் என்பதை உங்கள் மனதில் எப்பொழுதும் நினைவில வைக்க வேண்டும். இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள் .

மாறாக, சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வின் அருகாமையையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு இது ஒரு பெரிய பாக்கியமாகவும், வாய்ப்பாகவும் கருதுங்கள். மற்றவர்களுக்கான உங்கள் சேவையில் சோர்வடையவோ அல்லது கவனக்குறைவாகவோ இருக்க வேண்டாம். மேலும் தொடர்ந்து பங்களிக்கவும் புதிய வழிகளைப் பயன்படுத்தவும் உங்கள் வட்டத்தை விரிவுபடுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் மருத்துவ சங்கம் உருவாக்கப் -பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான உங்கள் முயற்சியில் ஆழமான மற்றும் அசாதாரணமான அதிகரிப்பை வரும் மாதங்களில் மற்றும் வருடங்களில் செய்யுங்கள். உங்கள் திறமைகள், அறிவு, வெற்றி அனுபவம் அனைத்தும் அல்லாஹ்வின் அருள்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

மேலும் அல்லாஹ்வின் பார்வையில் எப்போது சிறந்ததாக அமையும் என்றால் அவனது படைப்புகளுக்கு தன்னலமற்ற முறையில் சேவை செய்யும் போதே ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ் மனித குலத்திற்கு சேவை செய்வதற்கான புதிய யோசனைகள் மட்டும் திட்டங்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றை நிறைவேற்றுவதற்கும் உதவுவானாக. தேவையுடையவர்களுக்கு நீங்கள் ஆர்வம், கருணை, மென்மை மற்றும் இரக்கத்துடன் சேவை செய்யுங்கள். அல்லாஹ்வின் படைப்பிற்கு பயபக்தியுடன் சேவை செய்வதன் மூலம் அவனது திருப்தியையும் ஆசீர்வாதத்தையும் பெற முயலுங்கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருள்கொடைகள் அனைத்தும் பிறர் சேவையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அறிந்து மனித குலத்தின் உண்மையான சேவகர்களாக நீங்கள் அனைவரும் ஆவீர்களாக. ஆமீன்.

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)




தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

எனவே மார்க்கத்தின் அந்தப் பெரியவர்களுடைய அந்த அறியாமைக் காலத்தின் நிராகரிப்புகளை மீண்டும் மீண்டும் எடுத்து வைப்பது இந்தக் காலத்தின் வினோதமான நடைமுறையாக இருக்கிறது. அவற்றிலிருந்து (மறுப்பாளர்-களாக இருந்த) அவர்களே இறுதியில் விலகி, பாவமன்னிப்புத் தேடியவர்களாகி விட்டனர். ஆனால் அவர்கள் நேர்வழிக்கு வந்து விட்ட பின்னர் அவர்கள் கூறிய சாட்சியங்களை (ஆட்சேபனை செய்யும் இந்தக் கிறித்தவர்கள்) ஏற்றுக் கொள்வதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மு..ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) நாலாப்புறமும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அவை எப்படி மறைய முடியும்? நபித்தோழர்களால் நிரூபணமாகின்ற மு..ஜிஸாத்து -கள் (அற்புதங்கள்) மட்டுமே மூவாயிரம் மு..ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) ஆகும். மேலும் முன்னறிவிப்புகள் அநேகமாக பத்தாயிரத்தையும் விட அதிகமானவையாகும். அவை தமது நேரங்களில் நிறைவேறி விட்டன; இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இவை தவிர திருக்குர்ஆனின் சில மு..ஜிஸாத்துகள் (அற்புதங்கள்), முன்னறிவிப்புகள் எத்தகையவை என்றால், அவை நமது இந்தக் காலத்திலும் பார்க்கப்பட்டவையாகவும், உணரப்பட்டவையாகவும் இருக்கின்றன. எவரும் அவற்றை மறுக்க முடியாது. அவை இவையாகும்: (அதாவது கீழ்வருபவை திருக்குர்ஆனின் அற்புதங்கள் ஆகும்):

1. (அற்புதம்) ஒன்று, அந்தக் காலத்தில் மறுப்பாளர் -களுக்காக காட்டப்பட்டிருந்த தண்டனைக்குரிய அடையாளங் -கள் என்ற மு..ஜிஸா (அற்புதம்) என்பது எப்படிப்பட்டது என்றால், உண்மையில் அதை கண்ணால் கண்டது என்று கூற வேண்டும். அது உண்மையில் நமக்கும் கண்ணால் கண்டது என்று கூற வேண்டிய அடையாளமாகும். காரணம் என்ன -வென்றால், இது மிகவும் உறுதி மிக்க முன்னேற்பாடுகளின் ஒரு கண்டிப்பான விளைவாகும். அதை எதிர் கருத்து கொண்டவர், ஏற்றுக் கொண்டவர் எவரும், எந்நிலையிலும் மறுக்க முடியாது. முதலில் மு..ஜிஸாத்தின் (அற்புதத்தின்) அடிப்படையாக இருக்கும் இந்தப் பகுதி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் சில நண்பர்களும் மக்காவில் உண்மையின் பக்கம் அழைத்ததன் காரணமாக, தாமே நூற்றுக்கணக்கான துன்பங்களிலும், வேதனைகளிலும், துக்கங்களிலும் மூழ்கியிருந்த காலத்தில் இந்த தண்டனைக்குரிய அடையாளம் வேண்டப்பட்டது என்பது மிகவும் தெளிவான, ஒப்புக் கொள்ளப்பட்ட சான்று ஆகும். அந்த நாட்கள் இஸ்லாம் மார்க்கத்திற்கு எப்படிப்பட்ட பலவீனமான, ஆற்றல் இழந்த நாட்களாக இருந்தன என்றால், மக்கத்து நிராகரிப்பாளர்கள் கேலி, கிண்டலின் வழிமுறையை மேற்கொண்டவாறு முஸ்லிம்களிடம், நீங்கள், உண்மையில் இருக்கின்றீர்கள் என்றால், எங்களின் கைகளால் இந்த அளவுக்கு தண்டனையும், துன்பமும், துக்கமும், வேதனையும் உங்களுக்கு ஏன் ஏற்படுகிறது? எந்த இறைவன் மீது நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ அவன் உங்களுக்கு ஏன் உதவி செய்வதில்லை? நீங்கள் ஏன் கூடிய விரைவில் நாசமாகக் கூடிய இந்த அளவுக்குக் குறைந்த ஜமாஅத்தாக இருக்கிறீர்கள்? நீங்கள் உண்மையாளர்கள் என்றால் எங்கள் மீது தண்டனை ஏன் இறங்குவதில்லை என்று கேட்டனர்.

இந்தக் கேள்விகளுக்குக்கான விடையாக, திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட துக்கங்கள், துன்பங்களின் காலத்தில் மறுப்பாளர்களுக்குக் கூறப்பட்டுள்ளது என்னவெனில், அந்த இரண்டாவது பகுதி என்பது அந்த முன்னறிவிப்பின் வல்லமையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக இருக்கிறது. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்களுக்கு அது எப்படிப்பட்ட பலவீனமான காலமாக இருந்ததென்றால், எல்லா நேரமும் தமது உயிருக்கு ஆபத்து இருந்தது. அ(ந்த நேரமான)து நாலாப்புறமும் தோல்வியின் முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. எனவே அப்படிப்பட்ட காலத்தில் மறுப்பாளர்கள் தமது

தண்டனைக்கான அடையாளத்தைக் கேட்ட நேரத்தில், கூடிய விரைவில் இஸ்லாத்தின் வெற்றி பற்றியும், நீங்கள் தண்டனை பெறுவது பற்றியும் அடையாளம் காட்டப்படும் என்று அவர்களுக்குத் தெளிவாகக் கூறப்பட்டது. மேலும் இப்போது ஒரு விதையைப் போன்று தென்படும் இஸ்லாம் ஒரு நாள் ஒரு பெரிய மரம் போன்று தன்னை வெளிப்படுத்தும். மேலும் தண்டனைக்கான அடையாளத்தைக் கேட்கின்றவர்கள் வாளின் கூர்மையால் கொலை செய்யப்படுவார்கள். முழு அரபுத் தீவும் மறுப்பு என்பதை விட்டும், மறுப்பாளர்களை விட்டும் சுத்தமாக்கப்படும். அரபு நாட்டின் அரசாங்கம் நம்பிக்கை கொண்டவர்களின் கையில் வந்து விடும். பின்னர் சிலைவணக்கம் ஒருபோதும் உருவாகாத அளவுக்கு இறைவன் இஸ்லாம் மார்க்கத்தை அரபு நாட்டில் உறுதியாக நிலைநிறுத்தி விடுவான். தற்போதுள்ள அச்சமான நிலை முற்றிலும் அமைதியாக மாறி விடும். இஸ்லாம் ஆற்றல் பெற்று விடும்; வெற்றி பெற்றுக் கொண்டே செல்லும். எதுவரையென்றால், மற்ற நாடுகளில் தனது வெற்றி மற்றும் உதவியின் நிழலை இட்டுச் செல்லும். மேலும் வெகு தொலைவு வரை அதன் வெற்றிகள் பரவி விடும். ஒரு பெரும் ஆட்சி நிலைபெற்று விடும். உலகத்தின் இறுதி வரை அதற்கு வீழ்ச்சி இருக்காது.



இப்போது, எவர் முதலில் இந்த இரண்டு நிலைமைகளையும் பார்த்து, இந்த முன்னறிவிப்பு அறிவிக்கப்பட்ட அந்தக் காலம் என்பது இஸ்லாத்திற்கு எப்படிப்-பட்ட வறுமையான, தோல்விக்-கான, துன்பத்திற்கான காலமாக இருந்தது என்பதையும், என்ன முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அது எந்த அளவுக்கு அப்போதுள்ள நிலைமைக்கு எதிரானதாகவும், கற்பனைக்கும், சிந்தனைக்கும் மிகவும் அப்பாற்பட்டதாகவும் இருந்தது என்பதையும், இன்னும் கூறுவதென்றால், மிகத் தெளிவாக பொதுவான சாத்தியக் கூறுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் தென்பட்டிருந்தது என்பதையும் தெரிந்து கொள்வாரோ, பின்னர் இதற்குப் பிறகு நண்பர்கள், எதிரிகளின் கையில் (இப்போது) இருக்கும் இஸ்லாத்தின் வரலாற்றை, இந்த முன்னறிவிப்பு எவ்வளவு தெளிவாக நிறைவேறியிருக்கிறது என்பதையும், உள்ளங்களில் எந்த அளவுக்கு அச்சுறுத்தும் அதன் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது; எவ்வாறு கிழக்கிலும், மேற்கிலும் எல்லா முன்னேற்றங்களுடனும், ஆற்றல்களுடனும் அது வெளிப்பட்டது என்பதையும், எவர் நீதிக்கண் கொண்டு பார்ப்பாரோ, அவர் இந்த முன்னறிவிப்பை உறுதியாகவும், திட்டவட்டமாகவும் கண் கண்ட முஃஜிஸா (அற்புதம்) என்று கூறுவார். அதில் அவருக்கு ஓர் அணுவளவும் சந்தேகமும், ஐயமும் இருக்காது.

பிறகு, நம்மால் பார்க்கப்பட்டவையாகவும், உணரப்பட்ட-வையாகவும் இருக்கின்ற திருக்குர்ஆனின் இரண்டாவது முஃஜிஸா (அற்புதம்) திருக்குர்ஆனைப் பின்பற்றியதன் அருளாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த தாக்கத்தினாலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்களிடம் உருவான அற்புதமான மாற்றங்கள் ஆகும். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் எப்படி, எந்த வழிமுறையையும், பழக்கத்தையும் கொண்ட மனிதர்களாக இருந்தனர்? பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்ததாலும், திருக்குர்ஆனைக் கடைபிடித்ததாலும் எவ்விதமாக மாறி விட்டனர்? மேலும் எவ்வாறு நல்லொழுக்கத்திலும், கொள்கைகளிலும், நடத்தையிலும், பேச்சிலும், நடையிலும், பண்பிலும், தமது எல்லாப் பழக்கவழக்கங்களிலும் அசுத்தமான நிலைமையில் இருந்து மாறி மிகவும் தூய, பரிசுத்தமான நிலைமையில் இணைக்கப்பட்டு விட்டார்கள் என்பதையும், அவர்களின் துருப்பிடித்த இயல்புகளுக்கு ஓர் அற்புதமான புதுமையையும், ஒளியையும், மிளிர்தலையும் வழங்கி விட்ட அந்த மகத்தான தாக்கத்தையும் நாம் பார்த்து, இந்த ஆதிக்கம், ஒரு வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஆதிக்கமாக இருந்தது. அதை இறைவனின் கை செய்திருக்-கிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்: நான் அவர்களை இறந்தவர்களாக கண்டேன். நான் அவர்களுக்கு உயிரூட்டினேன். நரகத்தின் குழியில் வீழ்வதைக் கண்டேன். அந்த பயங்கரமான நிலையில் இருந்து விடுவித்தேன். நோயாளி-யாகக் கண்டேன். அவர்களை நலமாக்கினேன். இருளில் கண்டேன்; அவர்களுக்கு ஒளியைக் கொடுத்தேன். மேலும் இறைவன் இந்த அற்புதத்தைக் காட்டுவதற்கு திருக்குர்ஆனில் ஒருபுறம் இஸ்லாத்திற்கு முன்னர் அரபு மக்களிடம் இருந்த மோசமான நிலைமைகளை எழுதியுள்ளான். மறுபுறம் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடம் உருவாகி விட்ட அவர்களின் அந்தத் தூய நிலைமைகளை எடுத்துக் கூறியிருக்கிறான். மறுப்பின் காலத்தில் இருந்த அவர்களின் முந்தைய நிலைமைகளை எவர் பார்க்கின்றாரோ, அதற்கு மாற்றமாக அதற்குப் பின்னர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடம் வெளிப்பட்ட அவர்களின் நிலைமைகளைப் படித்தால் இந்த இரண்டு வகையான வாழ்க்கையைப் பற்றி அறியும்போது, இந்த மாற்றம் ஒரு வழக்கத்திற்கு அப்பாற்பட்ட மாற்றம் என்றும், அதை முஃஜிஸா (அற்புதம்) என்று கூற வேண்டும் என்றும் அவர் முழுமையான உறுதியுடன் புரிந்து கொள்வார்.

பிறகு நமது பார்வைக்கு முன்னால் இருக்கின்ற திருக்குர்ஆனின் மூன்றாவது முஃஜிஸா (அற்புதம்) என்பது அதன் உண்மைகள், ஞானங்கள், நுட்பங்கள் மற்றும் நுண்ணிய கருத்துகள் ஆகும். அவை அதன் பொருள் செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள சொற்றொடர்களில் நிறைந்து காணப்படுகின்றன. திருக்குர்ஆனில் இந்த முஃஜிஸா (அற்புதம்) மிகவும் விபரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முஃஜிஸா (அற்புதம்) எத்தகைய சான்றுடனும், ஆய்வுடனும் நிரூபணமாகி இருக்கிற

-தென்றால், எல்லா ஜின்களும், மனிதர்களும் ஒன்று சேர்ந்து இதற்கு நிகரானதை உருவாக்க விரும்பினால் அது அவர்களால் முடியாது என்று கூறியிருக்கிறான். இந்த மு.ஃஜிஸா (அற்புதம்) இந்தக் காலம் வரை பதிமூன்று நூற்றாண்டுகளை விட அதிகமாகி விட்டன. திருக்குர்ஆனின் அழைப்பு உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்போது, هَلْ مِنْ مُعَارِضٍ (ஆட்சேபனை செய்பவர் எவராவது இருக்கின்றாரா?) என்று மிகவும் வலுவாக கூக்குரல் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒருபோதும் எவரிடமிருந்தும் குரல் வரவில்லை. இந்தச் சான்றின் மூலமாக (திருக்குர்ஆனின்) இந்த அற்புதம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு நிரூபணமாகி இருக்கிறது.

எனவே எல்லா மனித ஆற்றல்களும் திருக்குர்ஆனுடன் போட்டி போட முடியாதவையாகவும், வாக்குவாதத்தில் வீழ்த்த முடியாதவையாகவும் இருக்கின்றன. இன்னும் கூறுவது என்றால், திருக்குர்ஆனின் நூற்றுக்கணக்கான சிறப்புகளில் இருந்து ஒரு சிறப்பை மட்டும் எடுத்து வைத்து அதற்கு நிகரானதைக் கேட்டால், விளக்கிக் கூறுவதில் பலவீனமாக இருக்கும் மனிதனால் அதன் ஒரு பகுதியை எடுத்து வைப்பது கூட முடியாததாகும் என்பதற்கு இதிலிருந்து தெளிவாக சான்று கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக, திருக்குர்ஆனின் சிறப்புகளில் ஒன்று, அது எல்லா மார்க்க ஞானங்களையும் உள்ளடக்கியுள்ளது என்ற ஒரு சிறப்பும் ஆகும். உண்மையுடனும், ஞானத்துடனும் தொடர்புடைய எந்த மார்க்க உண்மையும் இந்தத் திருக்குர்ஆனில் காணப்படாமல் இல்லை. ஆனால் இந்தப் பண்பு காணப்படுகின்ற இன்னொரு வேதத்தைக் கொண்டு வருபவர் யார் இருக்கிறார்? திருக்குர்ஆன், மார்க்கத்தின் எல்லா உண்மைகளையும் ஒருங்கே கொண்டதாகும் என்பதில் யாருக்காவது சந்தேகம் இருக்கும் என்றால், அப்படி சந்தேகம் கொள்பவர் கிறித்தவராக இருந்தாலும், ஆரியராக இருந்தாலும், பிராமணராக இருந்தாலும், நாத்திகராக இருந்தாலும் தனது நடைமுறையிலும் வழிமுறையிலும் சோதித்து தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளலாம். உண்மையைத் தேடுபவர் (உண்மை தெளிவான பிறகு) நம்மிடம் திரும்ப வேண்டும் என்ற நிபந்தனையுடன் அதற்கு நாம் பொறுப்பாளி ஆவோம்.

பைபிளில் எந்த அளவுக்குத் தூய உண்மைகள் இருக்கின்றனவோ அல்லது நாம் பார்த்தவரை ஞானிகளின் நூல்களில் எந்த அளவுக்கு உண்மை மற்றும் ஞானத்தின் விஷயங்கள் இருக்கின்றனவோ அல்லது நாம் பார்த்த இந்துக்களின் வேதங்களில் தற்செயலாக குறிப்பிடப் -பட்டிருக்கும் சில உண்மைகள் இருக்கின்றனவோ அல்லது எஞ்சியிருக்கின்றனவோ அல்லது நமக்குக் கிடைத்த தகவலின்படி, சூ.ஃபிகளின் நூற்றுக்கணக்கான நூல்களில் இருக்கின்ற ஞானம், இறைஞானத்தின் நுண்ணிய கருத்துகள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் நாம் திருக்குர்ஆனில் காண்கின்றோம். முப்பது ஆண்டுகளாக மிகவும் ஆழமான எல்லா அம்சங்களையும் சூழ்ந்த பார்வையால் நமக்குக் கிடைத்த இந்த முழுமையான ஆய்வு உள்ளத்திற்கும், மூளைக்கும், மன ஆற்றலுக்கும் தர்பிய்யத் கொடுப்பதற்குத் தாக்கத்தை வழங்குவதாக இருக்கின்ற எந்த ஆன்மிக உண்மையும் திருக்குர்ஆனில் குறிப்பிடப்படாமல் இல்லை என்று மிகவும் திட்டவட்டமாகவும், உறுதியாகவும் நமக்கு தெளிவாகி விட்டது. மேலும் இது நமது அனுபவம் மட்டுமல்ல. மாறாக, இதுவே திருக்குர்ஆனின் வாதமும் ஆகும். அதை நான் மட்டுமல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான மார்க்க அறிஞர்கள் துவக்கத்திலிருந்தே சோதித்துப் பார்த்து வந்திருக்கின்றனர். மேலும் அதன் உண்மைக்கு சாட்சி பகர்ந்து வந்திருக்கின்றனர்.

பிறகு திருக்குர்ஆனின் நான்காவது மு.ஃஜிஸா (அற்புதம்) அதன் ஆன்மிக தாக்கங்கள் ஆகும். அவை அதில் எப்போதும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதாவது, அதைப் பின்பற்றுபவர்கள் இறைவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்படும் அந்தஸ்துகளைப் பெறுகின்றனர். மேலும் இறைவனுடன் உரையாடும் சிறப்பைப் பெறுகின்றனர். இறைவன் அவர்களின் துஆக்களைக் கேட்கின்றான் மேலும் அவர்களுக்கு அன்பு மற்றும் அருளின் வழியில் விடை




அளிக்கின்றான். மேலும் நபிமார்களைப் போன்று சில மறைவான இரகசியங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கின்றான். மேலும் தனது உதவி ஒத்தாசையின் அடையாளங்களினால் அவர்களை மற்றவர்களிலிருந்து தனிச் சிறப்புடையவர்களாக ஆக்குகின்றான். இந்த அடையாளமும் முஹம்மதிய்ய உம்மத்தில் மறுமை வரை நிலைநிற்கும் அடையாளமாகும். மேலும் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இப்போதும் இருக்கின்றது. காணப்படுகிறது என்பது ஆய்வு செய்யப்பட்ட ஒன்றாகும். முஸ்லிம்களுக்கு அல்லாஹ் தனது சிறப்பான ஆதரவுகளினால் ஆதரவளித்து சஹீஹான, உண்மையான, நற்செய்திக்குரிய இல்ஹாம்கள் மற்றும் மறைவான ஆன்மிகக் கனவுகள் மூலமாக சிறப்பளிக்கின்றான். அத்தகையவர்கள் முஸ்லிம்களில் இப்போதும் இருக்கின்றனர்.

இப்போது உண்மையைத் தேடுபவர்களே! உண்மையான அடையாளங்களுக்காக தாகித்திருப்பவர்களே! நீதியுடன் பாருங்கள். எந்த அடையாளங்களை இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறானோ, அவை எவ்வளவு உயர் தரத்தைக் கொண்ட அடையாளங்கள் ஆகும். மேலும் அவை எவ்வாறு எல்லாக் காலத்திலும் காணப்பட்டவை -யாகவும், உணரப்பட்டவையாகவும் இருக்கின்றன என்பதைப்

பற்றி கொஞ்சம் தூய பார்வையுடன் பாருங்கள். முந்தைய நபிமார்களுடைய மு.ஃ.ஜிஸாத்துகளின் (அற்புதங்களின்) பெயர் கூட இப்போது எஞ்சியிருக்கவில்லை. வெறும் கதைகள் தான் இருக்கின்றன. அவற்றின் அசல் நிலை எந்த அளவுக்கு சரியானது என்பதை இறைவனே அறிவான். குறிப்பாக சுவிசேஷங்களில் எழுதியுள்ள ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் அற்புதங்களில் கதைகள், கட்டுக் கதைகளின் தொகுப்பு என்ற வகையில் இருந்தும், அவற்றில் பல மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாக இருந்தும், அவற்றின் மீது எப்படிப்பட்ட சந்தேகங்களும் ஐயங்களும் எழுகின்றன என்றால், அவற்றிலிருந்து முற்றிலும் சுத்தமாக்கியும் தூய்மையாக்கியும் காட்டுவது மிகவும் கடினமாக இருக்கிறது. வழிவழியாகக் கூறப்படும் சுவிசேஷங்களில் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி, அவர் சப்பாணிகள், முடவர்கள், பக்கவாதம் ஏற்பட்டவர்கள், குருடர்கள் ஆகிய நோயாளிகளை அவர் தொட்டதால் குணமாகி விட்டார்கள் என்று கூறப்பட்ட இந்த எல்லாக் கூற்றுகளிலும் மிகைப்-படுத்திக் கூறப்படாதவை என்றும், வெளிப்படையிலேயே பொருந்தக் கூடியவை ஆகும் என்றும் அதற்கு வேறு எந்தப் பொருளும் அல்ல என்றும் ஒரு கற்பனைக்காக நாம் ஏற்றுக் கொண்டாலும், அப்போதும் மஸீஹ் (அலை) அவர்களின் இந்த விஷயங்களினால் வேறு எந்தப் பெரிய சிறப்பும் நிரூபணமாகவில்லை.

முதலில், சுவிசேஷத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, அந்த நாட்களிலேயே ஒரு குளமும் இருந்தது. அதில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மூழ்கிக் குளித்தால் எல்லா நோய்களும் உடனே நீங்கி விட்டிருந்தன. இது சுவிஷேசத்திலேயே காணப்படுகிறது.★

அது மட்டுமின்றி, அவருடைய காலத்தில் நோய்களை நீக்கும் திறமை பற்றிய நீண்ட கால ஆய்வுகள், நோய்களை நீக்கும் திறமை என்பது பல்வேறு அறிவுத் திறன்களிலுள்ள ஓர் அறிவுத் திறன் ஆகும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. அ(தைக் கற்ப)தற்கு இப்போதும் பலர் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். அதில் கடுமையான கவனம் செலுத்துவது, மூளையின் ஆற்றல்களை செலவு செய்வது, சிந்தனையை ஈர்ப்பது, தாக்கத்தை உருவாக்குவது ஆகியவற்றிற்கான பயிற்சி தேவைப்படுகிறது.

எனவே இந்த ஞானத்துக்கு நுபுவ்வத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. இன்னும் கூறுவதாயின், நல்ல மனிதராக இருப்பது கூட அதற்கு அவசியமில்லை. மேலும் தொன்மை-யிலிருந்தே இந்த ஞானம் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. முஸ்லிம்களில் فُصُوْص (ஃபுஸூஸ்) என்ற நூலை எழுதிய முஹ்யுத்தீன் (இப்னு) அரபி போன்ற பெரியவர்கள் மற்றும் நக்ஷ்பந்தி பிரிவைச் சேர்ந்த சில பெரியார்களும் இந்த வேலையில் பெரும் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் காலத்தில் அவர்களுக்கு நிகரானவர்கள் காணப்படவில்லை. இன்னும் கூறுவதென்றால், அவர்கள் தமது முழுமையான கவனத்தினால் அல்லாஹ்வின் அனுமதியுடன் சமீபத்தில் இறந்தவர்களுடன் பேசிக் காண்பித்திருக்கிறார்கள் என்றும் அவர்களில் சிலரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.★

மேலும் இரு நூறு, முன்னூறு நோயாளிகளை தனது வலப்புறமும், இடப்புறமும் அமர வைத்து ஒரு பார்வையாலேயே நலமாக்கி விடுகின்றனர். மேலும் பயிற்சியில் கொஞ்சம் பலவீனமாக இருந்தவர்கள் கையால் பிடித்து அல்லது நோயாளியின் ஏதாவது ஆடையைத் தொட்டு குணமளித்து வந்தனர். இந்தப் பயிற்சியில் செயல்படுபவர் செயல்படும் நேரத்தில், நோயின் மீது தாக்கத்தை உருவாக்கும் நேரத்தில் தம்முள்ளிருந்து ஓர் ஆற்றல் வெளியாவதைப் போன்ற ஓர் உணர்வை உணர்கின்றார். மேலும் சில நேரத்தில் அதனுள்ளிருந்து ஒரு விஷமுள்ள பொருள் செயல்பட்டு கீழே உள்ள உறுப்புகளின் பக்கம் இறங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நோயாளியும் காண்கின்-றார். எதுவரையென்றால், முற்றிலும் அது நீங்கி விடுகிறது.

இந்த அறிவைப் பற்றி இஸ்லாத்திலும் ஏராளமான நூல்கள் காணப்படுகின்றன. இந்துக்களிலும் இது தொடர்பான நூல்கள் இருக்கும் என நான் கருதுகிறேன். அண்மையில் ஆங்கிலேயர்கள் Mesmerism (மெஸ்மெரிஸம் - மனோவசியம்) என்ற கலையை வெளிப்படுத்தி இருப்பதும் உண்மையில் இந்த ஞானத்தின் ஒரு கிளைதான். சுவிசேஷத்தைப் பற்றி சிந்திக்கும்போது ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கும் இந்த ஞானத்தில் ஓரளவுக்குப் பயிற்சி இருந்தது எனத் தெரிகிறது. ஆனால் முழுமையாக இருக்கவில்லை. அந்தக் காலத்து மக்கள் சாதாரணமானவர்களாகவும், இந்த ஞானம் பற்றி அறியாதவர்களாகவும் இருந்தனர். இதன் காரணமாகவே அந்தக் காலத்தில் இந்தச் செயல் தனது எல்லையை விட அதிகமாக புகழ்பெற்றதாகக் கருதப்பட்டது. ஆனால் பின்னர் இந்த ஞானம் பற்றிய உண்மை தெளிவாகிக் கொண்டிருந்த போது மக்கள் அதீதமான தமது கொள்கையிலிருந்து வீழ்ச்சி அடைந்து வந்தனர். எதுவரையென்றால், அப்படிப்பட்ட பயிற்சிகளால் நோயாளிகளை குணமாக்குவதும், பைத்தியம் பிடித்தவர்களுக்கு குணமளிப்பதும் எந்தச் சிறப்பிற்குரிய செயலுமல்ல; இன்னும் கூறுவதென்றால், அதில் ஈமான் கொண்டவராக இருப்பதும் அவசியமில்லை. அப்படியிருக்கும் போது, இது நுபுவ்வத் அல்லது இறைவனுடன் கொண்டிருக்கும் நேச உணர்வு என்பதற்கு எப்படிச் சான்றாக இருக்க முடியும் என்ற கருத்தை சிலர் வெளிப்படுத்தினர்.

★ அவைகளிலே குருடர்கள், முடவர்கள், வாத நோய் உள்ளவர்கள் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவ தூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான். கலக்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். (யோவான் 5:3,4 காண்க) - மொழிபெயர்ப்பாளர்.

★ கவனம் செலுத்தும் செயல் எனும் திறமையால் சமீபத்தில் இறந்தவர்கள், உயிரினங்கள் சில வினாடிகள் அல்லது சில மணி நேரங்கள் உயிர் பெற்று விடுவது என்பது இயற்கைச் சட்டத்திற்கு மாறுபட்டதல்ல. சில உயிருள்ளவை மரணித்த பிறகு ஏதாவது மருந்தினால் உயிர் பெற்று விடுவதை நாம் நம் கண்களால் காண்கின்றோம். இந்நிலையில் மனிதன் உயிர் பெறுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அது ஏன் அனுமானத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கும்? - நூலாசிரியர்.

உடல் அளவிலான நோய்களை நீக்குவது என்பதில் முழுமையான பயிற்சியும், அந்த முயற்சியிலேயே இரவு பகலாக தன்னை ஈடுபடுத்தி வைத்தல் என்பதும் ஆன்மிக முன்னேற்றத்திற்குக் கடும் நஷ்டத்தைத் தரக் கூடியது என்பதும் அவர்களின் கூற்றாகும். அப்படிப்பட்ட மனிதரின் கையினால் ஆன்மிக தர்பிய்யத்தின் (ஆன்மிக ஒழுக்கப் பயிற்சியின்) வேலை மிகக் குறைவாக இருக்கிறது என்பதும், அவருடைய உள்ளத்தின் ஒளிமிக்க ஆற்றல் மிகவும் அதிகமாக குறைந்து விடுகிறது என்பதும் அவர்களின் கூற்று ஆகும். இந்தக் காரணத்தாலேயே ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஆன்மிக தர்பிய்யத்தில் (ஒழுக்கப் பயிற்சி கொடுப்பதில்) மிகவும் பலவீனராக இருந்தார் என்ற சிந்தனையும் தோன்றலாம். பதவியைப் பொருத்த அளவிலும், சொந்த அந்தஸ்தைக் கொண்ட காரணத்தாலும் பாதிரி பட்லர் தனிச்சிறப்பான ஒரு மனிதராக இருந்தார் எனத் தெரிய வருகிறது. அவர், மஸீஹின் ஆன்மிக ஒழுக்கப் பயிற்சி மிகவும் பலவீனமானதாகவும், வலுவிழந்ததாகவும் நிரூபணமாகின்றது என்றும், ஹவாரிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட இயேசுவிடம் இருந்த சீடர்கள் தமது ஆன்மிக ஒழுக்கப் பயிற்சியைப் பெற்றவர்களாக இருப்பதிலும், மனித ஆற்றல்களின் முழுமையான நிறைவுத்தன்மையால் எந்தவோர் உயர்ந்த படித்தரத்தின் முன்மாதிரியையும் காட்ட முடியவில்லை என்றும் மிகவும் வருத்தத்துடன் எழுதுகின்றார்.

(அந்தோ! ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கு நோய்களை நீக்குவதன் பக்கம் குறைவாக கவனம் இருந்து, அதே கவனத்தைத் தமது சீடர்களின் வெளிப்படையான பலவீனங்கள், நோய்கள் ஆகியவற்றின் பக்கம் காட்டியிருந்தால், குறிப்பாக யூதாஸ்★ இஸ்காரியோத்-தின் மீது கவனம் செலுத்தி இருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!! - நூலாசிரியர்)

இந்த இடத்தில், பாதிரி பட்லர் (தொடர்ந்து) இவ்வாறு எழுதுகிறார்:

இயேசுவின் சீடர்கள் ஆன்மிக தர்பிய்யத்தைப் பெற்றிருப்பது, மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருக்கும் பண்பு ஆகியவற்றை அரபி நபி (ஸல்) அவர்களின் தோழர்களுடன் ஒப்பிட்டுப் பாரத்தால், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சீடர்கள் ஆன்மிகமான முறையில் தர்பிய்யத்தைப் (ஒழுக்கத்தைப்) பெறுவதில் மிகவும் குறைபாடுள்ளவர்களாகவும், பின்தங்கியவர்களாகவும் இருந்தார்கள் என்று நாம் மிகவும் வருத்தத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இயேசுவின் சீடர்கள் அவர்களுடன் இருந்தது என்பதை அந்த சீடர்களுடைய சிந்தனையின் ஆற்றல்களையும், உள்ளத்தின் ஆற்றல்-களையும் நபி (ஸல்) அவர்களின் சஹாபிகளுடன் ஒப்பிடுகையில், பாராட்டும் அளவுக்கு அவ்வளவு பரந்ததாக இருக்கவில்லை. இன்னும் கூறுவதென்றால், (இயேசுவின்) சீடர்களின் ஒவ்வோர் அடியிலும் கோழைத்தனம், கொள்கையில் சோம்பேறித்தனம், குறுகிய மனப்பான்மை, உலகத்தை விரும்புதல், நன்றி கெட்ட தன்மை ஆகியவை நிரூபணமாகிக் கொண்டிருந்தன. ஆனால் நபி (ஸல்) அவர்களின் சஹாபிகளிடம் எத்தகைய உண்மையும், நன்றியுணர்வும் வெளிப்பட்டதென்றால், அதற்கு நிகரானதை வேறு எந்த நபியைப் பின்பற்றுவர்களிலும் காண்பது கடினமாகும். எனவே அது முழுமையாக ஏற்பட்ட அந்த ஆன்மிக தர்பிய்யத்தின் விளைவாக இருந்தது. அது அவர்களை முற்றிலும் மாற்றி, எங்கிருந்து எங்கேயோ கொண்டு சென்று விட்டது.

(தொடரும்...)

★ யூதாஸ் என்ற இந்த சீடர்தான் இயேசுவை காட்டிக் கொடுத்தவர் (மத்தேயு 27:3 காண்க). அதாவது இயேசு மற்றவர்களுக்கு பல அற்புதங்களைக் காட்டியதில் இருந்த ஆர்வத்தைப் பிற்காலத்தில் தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்தின் மீது கவனம் காட்டியிருந்தால் அவருக்கு நன்றியுள்ள சீடராவது கிடைத்திருப்பார்! தன் சீடரை கூட சீர்திருத்த இயலாத இயேசு அற்புதங்களைச் செய்து காட்டினார் என்று எப்படி நம்புவது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருத்தத்துடன் குறிப்பிடுகிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்).

## தஹ்ரீகே ஜதீது

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“தஹ்ரீகே ஜதீது திட்டத்தை என் தரப்பிலிருந்து நான் கூறியுள்ளதாக நீங்கள் கருத வேண்டாம். ஒருபோதும் அவ்வாறு அல்ல. மாறாக, அதன் ஒவ்வொரு சொல்லையும் திருக்குர்ஆனிலிருந்து என்னால் நிரூபிக்க முடியும். அதன் ஒவ்வொரு கட்டளையையும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் கட்டளைகளில் இருந்து என்னால் காட்ட முடியும். ஆனால் சிந்திக்கின்ற மூளையும் நம்பிக்கை கொள்கின்ற உள்ளமும் தேவைப்படுகின்றது. எனவே, எதை நான் கூறினேனோ அதை நான் என் தரப்பிலிருந்து கூறியிருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டாம். மாறாக, இது எவனது கையில் உங்கள் உயிர் இருக்கின்றதோ அவனது கட்டளையாகும். நான் மரணித்து விட்டாலும் கூட அந்த இறைவன் வேறு ஒருவர் மூலமாக இதைத்தான் கூற வைப்பான். அவர் மரணித்த பிறகு இன்னொருவர் மூலமாக பேணி நடக்கும்படி செய்யாத வரை இவ்வாறு கூற வைப்பதை அவன் விட்டு விட மாட்டான்.”

(ஜுமுஆ குத்பா 13 டிசம்பர் 1935)

உலக மக்களுக்காக - முஸ்லிம்களுக்காக - அஹ்மதிகளுக்காக

# துஆ செய்யுங்கள்!

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் ஜுமுஆ உரைகளிலிருந்து...

- அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவா-னாக. அல்லாஹ் முஸ்லிம் நாடுகளுக்கும் நீதியில் நின்றவாறு ஒன்றுபடுவதற்கான நற்பேற்றை வழங்குவானாக.
- உலகப்போரை இன்னும் மூட்டுவதற்கு முயற்சி செய்கின்ற உலகத் தலைவர்-களுக்கு அல்லாஹ் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக.



இஸ்ரேல் தற்போது லெபனானின் எல்லைப் பகுதியில் ஹிஸ்புல்லாஹ் குழுவுக்கு எதிராக வெளிப்படையான போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு உள்ளது. இதனால் சூழ்நிலை மேலும் மோசமாக ஆகி விடலாம். அதே போன்று அமெரிக்காவும் ஏமனுடைய ஹூதி குழுக்களுக்கு எதிராக பகிரங்கமாக போரை ஆரம்பித்துள்ளது. இந்த அனைத்து விஷயங்களும் போரை மேற்கொண்டு விரிவுபடுத்துகின்றன. தற்போது எழுதக் கூடிய பலர் இதில் உலகப் போரின் அறிகுறிகள் மிக அருகில் இருப்பதாக தென்படுகின்றன என்று எழுதி வருகின்றனர். எனவே துஆக்களுக்கான மிக அதிக தேவை இருக்கின்றது. அல்லாஹ் மனித குலத்திற்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக. (ஜுமுஆ குத்பா 12.01.2024)

பாலஸ்தீனத்திற்காக நான் துஆக்களுக்காக கூறிக் கொண்டே இருக்கின்றேன். இப்பொழுது முஸ்லிம் நாடுகளின் நிலை எப்படி ஆகி விட்டது என்றால், அனைவரும் ஒன்று சேர்ந்து பாலஸ்தீனத்தைக் காப்பாற்றுவது பற்றிக் கவலைப்படுவதற்குப் பதிலாக முஸ்லிம்களே சண்டையிட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். இப்பொழுது பாகிஸ்தான் மற்றும் ஈரானிலும் சச்சரவு ஆரம்பித்து விட்டதாகக் கேள்விப்படுகிறேன். இவர்கள் ஒருவர் மற்றவர் மீது குண்டுகளும் வீசி வருகின்றனர். ஆக, இந்த பயங்கரமான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது.

எல்லாம் வல்ல அல்லாஹ்தான் இந்த முஸ்லிம் நாடுகளுக்கு, தலைவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்க வேண்டும். அவர்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உண்மையில் அவர்களுக்குத் தங்களுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் அவர்கள் ஒரே உம்மத்தாக ஆகக் கூடியவர்களாக இருப்பார்களாக. (ஜுமுஆ குத்பா 19.01.2024)

இன்றைய நாட்களில் ஏமன் நாட்டின் அஹ்மதிகளுக்-காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் மிகவும் துயரங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள். அதே போன்று முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்துவானாக. அவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக. உலகின் பொதுவான நிலைமை-களுக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக வேகமாக போரை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கருணை காட்டுவானாக. (ஜுமுஆ குத்பா 26.01.2024)

உலகத்தின் நிலைமைகளைப் பற்றி சிறிது கூறி விடுகின்றேன். போர்த் தீயோ பரவிக் கொண்டே செல்கின்றது. மனிதம் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டிய தேவை உள்ளது. உண்மையில் அஹ்மதிகள் சரியான முறையில் துஆ செய்தால்தான் இதற்கு ஏதாவது செய்ய முடியும். இஸ்ரேல் அரசாங்கம் தனது பிடிவாதத்தில் நிலைத்து நிற்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் இது காரணமாக அமைந்தது; இதனால் நாங்கள் இவ்வாறு செய்தோம் என்று அவர்கள் தங்களுடைய ஏதாவது சாக்குப் போக்கை, காரணத்தைத் தேடிக்

கூறிவிடுகின்றனர். அறிவுப்பூர்வமான எந்த விஷயத்தையும் ஏற்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை. உலகத்தின் ஆற்றல் படைத்த மற்ற அரசாங்கங்கள் தங்களுடைய விருப்பத்தாலோ அல்லது இஸ்ரேலைப் பார்த்து பயந்தோ இஸ்ரேலின் பிரதமர் அல்லது அரசு என்ன அறிக்கை விட்டாலும் சரி, இவர்கள் முதலில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும்; அநீதி முடிவுக்கு வர வேண்டும் என்று தங்களது அறிக்கையை விடுகின்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அறிக்கை விட்டதும் அதற்கு உடன் நிற்கின்றார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்கள் மீதும் கருணை புரிவானாக. இவர்களையும் அல்லாஹ்வின் பக்கம் குனியச் செய்வானாக. இது ஒன்று மட்டுமே வழியாகும். அதன் அடிப்படையிலேயே இவர்கள் தம்முடைய இம்மையையும் மறுமையையும் சீர்படுத்திக் கொள்ள முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்கள் மீது கருணை புரிவானாக. நமக்கும் துஆ செய்யும் நல்வாய்ப்பு வழங்குவானாக. நம் மீதும் கருணை புரிவானாக. (ஜுமுஆ குத்பா 16.02.2024)

பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிதை உருவாக்குவானாக. எதிரிகளோ தனது அனைத்து வகையான இழிவான சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளின் மூலமாக அவர்களை அழித்து விடுவதில் மும்முரமாக இருக்கின்றனர். வல்லரசுகள் போரைத் தடுப்பதற்குப் பகரமாக அதனை மூட்டுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்–கின்றன. அமெரிக்க அதிபர் கடந்த திங்கட்கிழமையன்று போர் நிறுத்தம் செய்யும்படி கூறியிருந்தார். தற்போது கூறுகின்றனர்: ரமலானுக்கு முன்னர் போர் நிறுத்தம் நடைபெறும். அதுவும் தற்காலிகமானதாக இருக்கும்; வெறும் ஆறு வாரங்களுக்கு இருக்கும். இதுவோ இஸ்ரேலுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதற்கான ஒரு வழிமுறையாகும். அதாவது இதற்கிடையில் அவர்களுக்கு ஓய்வும் கிடைத்து விடும்; மேலும் அவர்கள் புத்துணர்ச்சி பெற்று பின்னர் மீண்டும் அநீயிழைக்கத் தொடங்கி விடுவர். எனவே அல்லாஹ் மட்டுமே அவர்களின் கைகளைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே அதிகம் துஆ செய்யுங்கள்.

இதே போன்று எந்தத் தொண்டு நிறுவனத்தின் மூலமாக அவர்களுக்கு உணவு அல்லது மருந்துப் பொருட்கள் போன்றவை அல்லது வேறு எந்த வகையிலான உதவியும் கிடைக்க முடியுமோ அதனை அஹ்மதிகள் செய்ய வேண்டும். தமது வட்டத்தில் அவர்களுக்கு ஆதரவாக அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து முயற்சியும் செய்ய வேண்டும். அரசியல்வாதி–களுக்கு கடிதங்கள் எழுதுங்கள்; மேலும் இவற்றை எழுதுங்கள். நாம் சோர்வடைந்து விடக் கூடாது என்று நான் முன்னரும் கூறியிருந்தேன். நீங்கள் செய்து கொண்டிருப்பது மாபெரும் தவறாகும் என்று அரசியல்வாதிகளுக்குப் புரிய வையுங்கள். துஆக்கள் செய்வதற்கும், தமது ஆன்மிக நிலைமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அல்லாஹ் பாலஸ்தீனியர்களுக்கும் நற்பேறு வழங்குவானாக.

உக்ரைன் மற்றும் ரஷ்யா போரிலும், அதில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நேரடியாகப் பங்கு பெறுவதற்கான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதனாலும் உலகப் போருக்காக அபாயங்கள் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அல்லாஹ் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பானாக என்று இதற்காக எங்கு நீங்கள் துஆ செய்வீர்களோ அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்.




நான் முன்னரும் கூறியிருந்தேன். முன்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் அணு ஆயுதங்களின் பாதிப்புகளிலிருந்து தப்பிப்பதற்கு மருந்து ஒன்றினை வழங்கியிருந்தார்கள். அது ஜமாஅத்தில் மிகவும் பிரபல்யமானதாகும். நமது ஹோமியோபதி துறையும் அதனை வழங்கும். அதனையும் குறைந்தபட்சம் ஒரு கோர்ஸ், மூன்று மூன்று தடவை மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். (ஒவ்வொரு மருந்தையும் மூன்று முறை எடுத்துக் கொள்ள வேண்டும்).

அதே போன்று அஹ்மதிகள் மூன்று மாதங்களுக்கான ரேஷன் பொருட்களையும் வீட்டில் வைக்க வேண்டும். குறிப்பாக எங்கு போருக்கான நேரடி அபாயம் இருக்கின்றதோ அங்குள்ள–வர்கள் வைத்துக் கொள்ள வேண்டும். போர் நடைபெறவில்லை என்றாலும் அப்போதும் கூட அதனால் நன்மையே விளையும். ரேஷன் பொருட்களையும் மக்கள் சேமித்து வைத்திருந்தனர். பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எங்களுக்கு பயன் விளைந்தது என்றே அவர்கள் கூறினர். (ஜுமுஆ குத்பா 08.03.2024)

முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக. வந்திருக்கக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆவார்களாக. போர்களின் தீய தாக்கங்களில் இருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். முஸ்லிம் நாடுகளில் ஆற்றலைப் பெறுவதற்காக எந்தப் போர்கள் செய்யப்படுகின்றனவோ மேலும் அதன் விளைவாக அப்பாவி பொதுமக்கள் அநீதி எனும் ஆட்டுரலில் அரைக்கப்படுகிறார்

–களோ அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிந்தவாறு அந்த அநீதியிழைப்பவர்களிடமிருந்து விடுதலை அளிப்பானாக.

உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் போரிலிருந்தும் அதன் பயங்கரமான விளைவுகளில் இருந்தும் காப்பாற்றுவானாக. போர் நடக்கும் சூழ்நிலையில் அஹ்மதிகளும் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது வெளிப்படையான விஷயமாகும். அல்லாஹ் அவர்களை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக. அதிலிருந்து தப்பிப்ப–தற்காகவும் ஒவ்வோர் அஹ்மதியும் தனது இறையச்சத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.



இங்கு யு.கே.–யிலும் முஸ்லிம்களுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுவதாகத் தெரிகிறது. பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் இது முஸ்லிம்களைக் குறிவைப்பதற்காக என்பது பொதுவான ஆய்வாளர்களின் சிந்தனையாகும். எவ்வாறிருப்பினும், இதற்குப் பின்னால் என்ன இருக்கிறது? இந்த மக்களின் எண்ணங்கள் என்ன? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் நாம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நம்மையும் இங்குள்ள மற்ற முஸ்லிம்–களையும் அதன் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக. (ஜுமுஆ குத்பா 15.03.2024)

பாலஸ்தீனர்களையும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். போர் மட்டுமின்றி பசியாலும் நோயினாலும் இப்பொழுது குழந்தைகள் மற்றும் அப்பாவிகளின் உயிர்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. இது மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள பஞ்சமும், பசியும், அழிவும் ஆகும். இஸ்ரேலிய அரசாங்கத்தின் கடுமை மற்றும் பிடிவாதத்தின் காரணமாக இது உருவாகிக் கொண்டிருக்கிறது என்று இப்பொழுது ஐ.நா சபையும் கூற ஆரம்பித்து விட்டது. வழிகள் திறந்து விடும் என்றால், உதவிகள் விரைவாக சென்றடைந்து விடும் என்றால் இப்பொழுதும் கூட சீரமைப்பு ஏற்பட முடியும்.

அதே போன்று சூடானுடைய பொதுமக்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் தலைவர்களுக்கும் அதிகார பலம் கொண்டவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. அங்கும் பசி மற்றும் நோயினால் மக்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். அந்நாட்டு மக்களே தம் மக்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அனைத்தும் ஏன் நிகழ்கிறது என்றால் உலக ஆசைகளின் காரணமாக ஆகும். திருக்குர்ஆனின் போதனையை மறந்து விட்டார்கள். அல்லாஹ்வின் சார்பாக இந்தக் காலத்தில் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்ள மறுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதே போன்று இன்னும் பல முஸ்லிம் நாடுகளும் உள்ளன. அங்கும் பெரும் துன்பத்தின் நிலை காணப்படுகின்றது. அரசாங்கங்கள் தம் குடிமக்களின் மீது அநீதியிழைத்துக் கொண்டிருக்கின்றன. பரஸ்பரம் மக்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக. பாகிஸ்தானில் உள்ள நமது அஹ்மதி சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். ஏமனில் உள்ள சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். பாகிஸ்தானுடைய பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அஹ்மதிகளைப் பாதுகாப்பானாக. (ஜுமுஆ குத்பா 22.03.2024)

பாலஸ்தீனத்து மக்களையும் துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள். வெளிப்படையில் இவர்கள், பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றார்கள். ஆனால் நிலைமை–களோ மிகவும் மோசமாகிக் கொண்டேதான் செல்கின்றன. ஐ.நா–வின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும் கூட அந்த அநீதி அதே போன்று தொடர்கிறது. மேலும் இங்கு பெரும் மேற்கத்திய ஆற்றல்களின் இரட்டை நிலைப்பாடு பற்றியும் தெரிய வருகிறது. இதே அநீதி அவர்களுக்குப் பிடித்தமான மக்கள் மீது, நாடுகள் மீது இழைக்கப்பட்டால் உடனடியாக மற்ற நாடுகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் இஸ்ரேல் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட மாட்டாது.

இன்னும் சொல்வதென்றால், கடந்த நாட்களில் அவர்–களுக்குப் பல மில்லியன் டாலர்கள் கொண்ட நிபந்தனையற்ற உதவித் தொகைக்கு அமெரிக்காக ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் பாலஸ்தீனர்களுக்காக சில மில்லியன்கள் உதவித் தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பிறகு இந்த நிபந்தனையையும் விதித்து விட்டது. அதாவது அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லக் கூடாது அல்லது எங்கு அவர்களுக்கு இதற்கு எதிராக ஏதாவது கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமோ அப்படிப்பட்ட எந்த மன்றத்திடமும் செல்லக் கூடாது.

எனவே இவர்களைப் போன்ற மக்களிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? எனவே அல்லாஹ்வால்தான் துஆவால் தான் இந்த அநீதிக்குள்ளானவர்களை அந்த அநீதியாளர்

–களிடமிருந்து காப்பாற்ற முடியும். நமக்கும் அவர்களின் அநீதிக்குள்ளானவர்களுக்காக துஆவிற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக. (ஜுமுஆ குத்பா 29.03.2024)

பாலஸ்தீனம் மற்றும் உலகத்தின் நிலைமைகளுக்காகவும் தொடர்ந்து துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். நிலைமைகள் மோசத்திலும் மோசமாகிக் கொண்டே செல்கின்றன. ஈரான் தாக்குதல் குறித்தும், பிறகு போர் மேலும் விரிவாகப் பரவுவது குறித்தும் ஆபத்து உள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக.

ஏமனில் இறைவழியில் சிறை சென்றவர்கள் சிலர் விடுதலையாகி இருக்கின்றார்கள். இந்தச் செய்தி வந்துள்ளது. இன்னும் கூறுவதாயின், நேற்றே பெரும்பாலார் விடுவிக்கப்பட்டு விட்டனர். மீதமிருக்கும் அந்த சிலருடைய விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள். அதிகாரிகளின் உள்ளத்தை அல்லாஹ் அவர்களைக் குறித்து தெளிவாக்குவானாக. குறிப்பாக லஜ்னா தலைவியான ஒரு பெண்மணி சிறைவாசத்தில் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களது விரைவான விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. (ஜுமுஆ குத்பா 12.04.2024)

பொதுவாக நான் துஆவுக்காக வலியுறுத்தி வருகின்றேன். துஆக்களைத் தொடர்ந்து செய்து வாருங்கள். நினைத்தது போன்று, அச்சப்பட்டது போன்று ஈரான் மீது நேரடியாகவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இது எல்லாருக்கும் தெரியும். இதனால் சூழ்நிலைகள் இன்னும் மோசமாகும். உலகப் போரை இன்னும் மூட்டுவதற்கு முயற்சி செய்கின்ற உலகத் தலைவர் –களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக. முஸ்லிம் சமுதாயத்திற்கும் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக. அவர்கள் ஒன்றாகி பிறகு தம்மை எதிர்க்கின்றவர்களை சரியான முறையில் எதிர்க்கக் கூடியவர்களாகவும், நுட்பமாக செயல்படுவதைத் தமதாக்கக் கூடியவர்களாகவும் ஆவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. (ஜுமுஆ குத்பா 19.04.2024)

உலகின் சூழ்நிலைகளைக் குறித்தும், முஸ்லிம்களுடைய சூழ்நிலைகள் மற்றும் பாலஸ்தீனம் குறித்தும் துஆவிற்காக நான் கவனமூட்டி வருகின்றேன். கொஞ்ச காலத்திற்காக போர் நிறுத்தம் ஏற்பட்டு விடும் என்று சில பகுதிகளில் கருதப்படு –கின்றது. ஆனால் சூழ்நிலைகளைப் பார்க்கும் போது அவ்வாறு நிகழ்ந்து விட்டாலும் கூட பாலஸ்தீனியர்கள் மீதான அநீதி முடிவுக்கு வராது என்றே தெரிகிறது. ஆகவே மிக அதிகமான துஆக்களுக்கான தேவை இருக்கின்றது. அல்லாஹ்வின் பக்கம் குனியக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் பாலஸ்தீனியர்களுக்கும் வழங்குவானாக.

எவ்வாறிருப்பினும், இந்த சூழ்நிலைகள் ஆணவம் கொண்டோரின் ஆணவத்தை நொறுக்குவதற்கான ஏற்பாட்டையும் உருவாக்கி விட்டது. அவர்களுடைய ஆணவத்தை நொறுக்குவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் ஆரம்பித்து விட்டான் என்றே தெரிகிறது. இந்தப் பணி எப்பொழுது முழுமை பெறும்? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

எவ்வாறிருப்பினும், இந்த ஆணவம் இப்பொழுது நொறுங்க ஆரம்பித்து விட்டது. அவர்களுக்குள்ளேயே அவர்களின் எதிர்ப்பாளர்கள் உருவாக ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காவிலும் எதிர்ப்புக் குரல் எழ ஆரம்பித்து விட்டது. எதிர்ப்புக் குரலை அடக்குவதற்கு இப்பொழுது ஆற்றலைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர். ஆனால் அவ்வாறிருந்தும் இந்தத் தீப்பிழம்புகள் கொழுந்து விட்டெரியும். அல்லாஹ் உலகின் வல்லரசுகளுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் நீதியுடன் நடந்து கொள்வார்களாக. தமக்கென்று ஒரு நியதி, மற்றவர்களுக்கென்று இன்னொன்று என்ற இந்த விஷயமே பிறகு ஒரு நேரத்தில் ஐ.நா உடைவதற்கும் காரணியாக அமைந்து விடும். (ஜுமுஆ குத்பா 03.05.2024)



இன்று நான் மீண்டும் ஏமன் நாட்டின் இறைவழியில் சிறை சென்றவர்களுக்காக குறிப்பாக துஆவுக்காக கூற விரும்புகிறேன். குறிப்பாக அங்கு லஜ்னா தலைவியாக இருக்கும் அந்தப் பெண்மணிக்காகவும் (துஆ செய்யுங்கள்). இவரை மிகவும் சிரமத்தில் வைத்துள்ளார்கள்; சிறைவாசத்தில் வைத்துள்ளார்கள். மேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆயத்தமாக இல்லாத சில நபர்களையும் கைதிகளாக ஆக்கி வைத்துள்ளனர். அவர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் விடுதலை ஆவதற்கான ஏற்பாட்டைச் செய்தருள்வானாக. பாகிஸ்தானில் இறைவழியில் சிறை சென்றவர்களின் விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள்.

பாலஸ்தீனத்து மக்களுக்காகவும் துஆ செய்து கொண்டே இருங்கள். அவர்களுடைய நிலைமையும் சீரடைவதாகத் தெரிந்து மீண்டும் சீர்கெட்டு விடுகின்றது. இஸ்ரேல் அரசு ஆணவத்துடன் செயல்படுகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது அநீதியிலிருந்து விரைவில் விடுதலையை வழங்குவானாக. முஸ்லிம்களுக்கும் தங்களுடைய உரிமையை நிறைவேற்றுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. (ஜுமுஆ குத்பா 10.05.2024)

துஆவின் பக்கம் நான் கவனமூட்டி வருகின்றேன். பாலஸ்தீனயர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். தற்போது நிலைமை உச்சத்தை அடைந்து விட்டது. இது எங்களுடைய ரெட் லைனாக இருக்கும் என்று ரஃபா பகுதியைக் குறித்து முன்னர் அமெரிக்கா கூறி வந்தது. இல்லை; தற்போதும் முடிவடைய –வில்லை என்று கூறுகின்றனர். அவர்களுடைய ரெட் லைனின் அளவுகோல் என்னவென்று தெரியவில்லை. எத்தனை இலட்சம் மக்களை அவர்கள் கொலை செய்ய இருக்கின்றார்களோ? அதன் பிறகுதான் அவர்களிடம் ஏதாவது அசைவு ஏற்படும் போல் தெரிகிறது. அல்லாஹ் இந்த அநீதியாளர்களிடமிருந்து உலகிற்கு இரட்சிப்பை வழங்குவானாக. மேலும் அப்பாவி பாலஸ்தீனியர் –களுக்கும் இரட்சிப்பை வழங்குவானாக.

இதே போன்று சூடான் மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கோ அவர்கள் தங்களது சொந்த சமுதாயத்தின் மக்களை சுயமே கொன்று வருகின்றனர். முஸ்லிம்களை முஸ்லிம்களே கொல்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் இவர்கள் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிப்பவர்களாக இருக்கட்டுமாக. மேலும் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்கள் அல்லாஹ்வின் கட்டளை –களின்படி அமல் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கட்டுமாக. (ஜுமுஆ குத்பா 31.05.2024)

நான் எப்பொழுதும் வலியுறுத்துவது போன்று அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக துஆக்கள் செய்து வாருங்கள். அல்லாஹ் விரைவில் அநீதியாளர்களைப்



பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. எவ்வாறு ஸஹாபிகள் ஏமாற்றப்பட்டு கொல்லப்பட்டார்களோ அவ்வாறு அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். சில சமயம் ஓர் இடத்திற்கு அனுப்பப்படு–கிறார்கள். சில சமயம் வேறு இடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். பிறகு அங்கே குண்டுகள் வீசப்படுகின்றன. அல்லாஹ் கருணை காட்டுவானாக.

உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக வேகமாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. போருக்கான அறிகுறிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அல்லாஹ் அஹ்மதிகளைப் போரின் தீய தாக்கத்திலிருந்தும், அதனுடைய தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக. (ஜுமுஆ குத்பா 14.06.2024)

உலகின் பொதுவான சூழ்நிலை போர்ச் சூழலாக மாறிக் கொண்டிருக்கின்றது. இதற்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் எந்தத் திசையை நோக்கி செல்கிறதோ அதைப் பார்க்கும் போது இப்பொழுது போர் கண்டிப்பாக நிகழும் என்றே தெரிகிறது. அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் ஒவ்வோர் அப்பாவியையும் இந்தத் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. (ஜுமுஆ குத்பா 28.06.2024)

மீண்டும் துஆக்களின் பக்கம் கவனமூட்ட விரும்பு–கின்றேன். அல்லாஹ் உலகில் அமைதியை நிலைபெறச் செய்வதற்காக துஆ செய்யுங்கள். அந்த அமைதியை தம் காலத்திலும் நிலைநாட்டுவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் முயற்சி செய்தார்கள். இது அன்னாருடைய வருகையின் நோக்கமாக இருந்தது. இஸ்லாமிய போதனையின் நோக்கமாக உள்ளது. இந்த அனைத்தும் அல்லாஹ்வுடைய சிறப்பான அருளினால் மட்டுமே நிகழ முடியும். இதற்காக துஆக்களின் தேவை உள்ளது.

இப்போது உலகவாதிகள் தம்மைத்தாமே காயப்படுத்திக் கொள்வதை விட்டு விலக மாட்டார்கள் என்பது போன்று வெளிப்படையில் தெரிகின்றது. வெளிப்படையான முறையில் அமைதிக்கான சூழல் தென்படவில்லை.

இரண்டாவது விஷயம், இந்த மேற்கத்திய நாடுகளில் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் மிகவும் வேகம் எடுத்துள்ளன; வேகம் எடுக்கும்; அது இன்னும் அதிகரிக்கும் என்றே தோன்றுகின்றது. இதற்காகவும் முஸ்லிம்கள் தம் இருப்பிற்காகவும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் ஒற்றுமையாக ஆக வேண்டும். தம் நிலைகளை மேம்படுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை புரியக் கூடியவர்களாக ஆக்குவானாக. (ஜுமுஆ குத்பா 05.07.2024)

**(தொகுப்பு: A. அப்துல் நிஸார்)**

## அஹ்மதிகளிடம் அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களின் வேண்டுகோள்!

இந்த துஆவை செய்வீர்களாயின், ஒரு பாதுகாப்பான கோட்டையில் நுழைந்து விடுவீர்கள். அங்கு ஷைத்தானால் ஒருபோதும் நுழைய முடியாது. (குத்பா ஜுமுஆ 23.08.2024)

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

*(ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ ஸுப்ஹானல்லாஹில் அழீம் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதி(ன்)வ் வஆலி முஹம்மத்)*

**DAILY 200 TIMES**

பொருள்: அல்லாஹ் தூயவன். அனைத்துப் புகழுக்கும் உரியவன் அவனே. மகத்துவமிக்க அல்லாஹ் தூயவன். அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரது குடும்பத்தினர் மீதும் பெரும் கருணையையும், அருளையும் இறக்குவாயாக.

اَسْتَغْفِرُ اللّٰهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ

*(அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பி மின் குல்லி ஸ(ன்)ம்பி(ன்)வ் வ அதூபு இலைஹி)*

**DAILY 100 TIMES**

பொருள்: நான் என் இறைவனிடம் என் பாவங்களுக்காக பாவமன்னிப்புக் கோருகிறேன். அவன் பக்கமே திரும்புகிறேன்.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

*(ரப்பி குல்லு ஷய்யின் ஹாதிமுக ரப்பி ஃபஹ்பல்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ)*

**DAILY 100 TIMES**

பொருள்: என் இறைவா! ஒவ்வொன்றும் உனக்குத் தொண்டாற்றுகிறது. என் இறைவா என்னைப் பாதுகாப்பாயாக. எனக்கு உதவி புரிவாயாக. என் மீது கருணை காட்டுவாயாக.

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam